Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 3—No. 3.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

| மலர் ௩ | சுக்கில ஆண்டு பங்குனித் திங்கள்<br>1930௵ மார்ச்சுமீ | இதழ் ௩ |
|---|---|---|

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| சமயமும் சட்ட சபையும் ... ... ... | ௪௧ |
| வையமெங்கும் சமயம் ... ... ... | ௪௩ |
| சிவன் செயலும் சீவன் செயலும் ... ... | ௪௪ |
| இயற்கைத் தத்துவ நூலும் சைவ சமயமும் ... | ௪௫ |
| சேரன் செங்குட்டுவன் ... ... ... | ௫௪ |
| சைவ மங்கையர் மகாநாடு ... ... ... | ௫௭ |
| சென்றடையாத திருவுடையான் ... ... | ௬௧ |
| அதர்வசிகோபநிஷத் ... ... ... | ௬௨ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L., M. L. C.
உதவி ஆசிரியர் :—கி. குப்புச்சாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1 8 0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2 0 0.
தனிப் பிரதி அணா 3.

# நமது சமாஜத்தின் விசேஷ மகாநாடு

[நமது நிருபர் சாமி வேலாயுதம் பிள்ளையவர்களிடமிருந்து]

கும்பகோணத்திலிருந்து நீடாமங்கலத்திற்குச் செல்லும்வழியில் 10 மைல் தூரத்திலுள்ள **ஆலங்குடி** என்னும் பாடல் பெற்ற ஸ்தலத்தின் திருப்பணி 8 ஆண்டுகளாக நடைபெற்று வருவது அன்பரறிந்ததே. இப்பணியை வெகு விரைவில் முடித்து நாளது பிரமோதூத வரு **வைகாசிமீ ௧௯ உ** (1-6-30)-ல் கும்பாபிஷேகமும் முடிக்கக் கருதியிருப்பது சைவ உலகின் பெரும் பேறாகும். இப்புண்ணிய ஏற்பாட்டின் தலைவர்கள் **பழ. சே. லே. பழ. இலட்சுமண செட்டியார்** அவர்கள், **பழ. சே. லே. பழ. பழனியப்ப செட்டியார்** அவர்கள் ஆகிய இரு உடன்பிறந்தாராவர். இவர்கள் இருபது ஆண்டுகளுக்கு முன்பே **திருக்கடவாய்க்கரைத் தென்புத்தூர்** என்கிற ஆண்டான் கோயிலைத் திருப்பணி செய்து முடித்த பேரருளாளராவர். இவர்கள் திருப்பணி செய்து வருவதோடு நில்லாது இக்கோயில்களின் நித்திய நைமித்திகங் களையும் வெகு ஒழுங்காய் நடத்தி வருகின்றனர். இன்னார் வழி வழி, நீடூழி வாழ்க! வாழ்க!! கும்பாபிஷேகத்தின்பொழுது நம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் விசேஷ மகாநாடு ஒன்று நடத்த ஏற்பாடு செய்வதை அறிந்த ஷெ செட்டியாரவர்களின் அன்பார்ந்த நண்பரும், ஷெ கும்பாபிஷேக வேலைகளை முன்னின்று செய்பவருமான வேடம்பூர் சாமி வாஞ்சிலிங்கம் பிள்ளை என்பார், செட்டியாரவர்களை வேண்டி நம் சமாஜக் கூட்டத்திற்கான வசதி அளிக்கும் படி ஏற்பாடு செய்ய இசைந்துள்ளார்கள். இக்கூட்டம் இனிது முடியுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆலங்குடிக் கோயிலின் பெருமையும் திருப்பணி செய்துவரும் செட்டியாரவர் களின் சரித்திரமும் அடுத்த இதழ்களில் வரும்.

---

## சைவ இளைஞர் மகாநாடு, திருவிடைமருதூர்

சைவ இளைஞர் மகாநாடு மார்ச்சு மாதத்தில் நடந்தால் தாங்கள் வருவது கூடாமற் போகும் என்று பல பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள் தெரிவித்துக் கொண்டதின் பேரில் ஏப்ரல் மாதத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் திருவாளர் - தி. ரா. பொ. குப்பு சாமிப் பிள்ளையவர்கள் செவ்வனே செய்து வருகிறார்கள்.

---

## பூவாளூரில் ஆண்டு விழா

பூவாளூர் சைவ சித்தாந்த சங்கத்தின் 20-வது ஆண்டு விழா நாளது மார்ச்சு மாதம் 30, 31-ந் தேதிகளில் சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசியும், "சித்தாந்தம்" ஆசிரியரு மாகிய திரு. ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், பி. ஏ., பி. எல்., எம். எல். சி. அவர்களின் தலைமையில் நடைபெறும்.

---

## திருவொற்றியூர் திருவிழாவில் சமய போதனை

நமது சமாஜமும் திருவொற்றியூர் குகபக்த சமாஜமும் ஒன்று சேர்ந்து இச்சமயபோத னைச் சொற்பொழிவுகளை நடத்தி வைத்தன. ஆரும்பவனித் திருநாளன்று மாலையில் (9—2—1930) திரு. C. T. பார்த்தசாரதி முதலியார் அவர்கள் "முருகன் பெருமை" என் பது பற்றியும், திரு. C. S. சுவாமிநாத முதலியார் அவர்கள் "கடவுள் வழிபாடு" என்பது பற்றியும் ஆராய்ச்சி நிரம்பிய அரிய சொற்பொழிவுகள் செய்தனர். மகிழடிசேவைத் திரு நாளன்று மாலையில் (12—2—1930) திரு. கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் "மகிழடி சேவையின் அருத்தம்" என்பது பற்றியும், திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் "கலிய நாயனார்" என்பது பற்றியும் கற்றோரும் மற்றோரும் எளிதில் உணரும் வண்ணம் அரிய பொருள்களை இலகுவாக எடுத்துரைத்தனர். பந்தம்பறித் திருநாளன்று மாலையில் (14—2—1930) திரு. கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் "கடவுளுக்கும் திருவூடல் உத்ஸவம்" உண்டு என்பதையும், திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் "திருவிழாக்களின் பயன்" என்பதையும் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் "சமய குரவர்கள்" என் பதையும் பற்றி மிகத் திறம்படப் பல நுண்பொருள்களடங்கிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். மூன்று நாட்களிலும் எல்லா ஏற்பாடுகளையும் செவ்வனே செய்துகொடுத்த குகபக்த சமாஜத் தினருக்கும் சொற்பொழிவாளர்கள் முதலியோருக்கும் காரியதரிசி வந்தனம் கூறிய பின்னர் கடவுள் வாழ்த்தொலி முழங்கச் சபை கலைந்தது.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

“ ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு ”

| மலர் ௩ | சுக்கில ஆண்டு பங்குனித் திங்கள்<br>1930 ௵ மார்ச்சு ௴ | இதழ் ௩ |
|---|---|---|

## சமயமும் சட்ட சபையும்

[பத்திராசிரியர்]

செங்கல்பட்டு ஜில்லா வாசிகளில் நிரம்பிய சமயப்பற்றும், நல்ல ஒழுக்கமும், அளவற்ற ஊக்கமும், பெருஞ் செல்வாக்கும் உள்ள சிலர் தைமாதத் தொடக்கத்தில் என்னைப் பன்முறை வற்புறுத்தி, சென்னைச் சட்டசபைத் தேர்தலில் ஓர் அபேக்ஷகனாக நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அவர்கள் என் சம்மதத்தைப் பெறுவதற்குப் பல காரணங்கள் கூறினார்கள். அவைகளை இங்கு விவகரிக்கத் தேவையில்லை; ஏனெனில் அக் காரணங்களை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் இறுதியில் அவர்கள் கூறிய ஒரு காரணம் மட்டும் நான் தள்ளக்கூடாததாக இருந்தது.

சுயமரியாதை மகாநாடு முதன் முதலாக நடந்த ஜில்லாவில் ஆஸ்திக சமயக்கக்ஷி எதிர்ப்பில்லாத வெற்றி பெறுவதற்கு நான் துணையாக இருக்க வேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். இந்தக் காரணம் ஒன்றே என்னை அவர்கள் வேண்டுகோளுக் கிணங்கச் செய்தது. சுயமரியாதை மகாநாட்டிற் கலந்துகொண்ட சிலர் என்னை எதிர்க்க யோசித்தனர், முன் வரவும் முயன்றனர். ஆனால் அம்முயற்சி வீணாயிற்று. இறுதியில் ஆஸ்திக சமயக் கக்ஷிக்கு தன்னிகரில்லாத வெற்றி கிடைத்தது. இதற்கு நான் துணையாக யிருந்தமைக்கு மகிழ்வெய்துகிறேன்.

சட்டசபையில் (சென்னையிலும் மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும்) அங்கத்தவராக யிருப்பவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் சமயப்பற்று அற்றவர்களாக யிருக்கின்றனர். இக்குழுவில் நான் சென்று செய்யக் கூடியது என்ன இருக்கின்றது

எனப் பல நண்பர்கள் என்னை வினவு கின்றார்கள். பிப்ரவரி மாதம் இருபத்து நான்காம் தேதி முதல் தற்போதைய சட்ட சபையின் ஆயுள் முடிவுவரை (அதாவது சில மாதங்களில்) நான் தனித்து செய்யக்கூடியது ஒன்றே என்பது வெளிப்படை. அதாவது சட்டசபையில் தற்போது உள்ள அங்கத்தினருக்கு சமயப்பற்று என்பது எள்ளளவும் கிடையாது என்பதைக் கூடியவரையில் கூடிய சந்தர்ப்பங்களிலெல்லாம் வெளிப்படுத்துவதற்குத் துணையாக இருப்பது ஒன்றே. அரசாங்கத்தினர் சமயக்கல்வி, சமய நிலையங்கள் முதலியவற்றை ஒரு சிறிதும் கவனியாது இருக்கின்றனர் என்பதையும் கூடியவரையில் நிரூபிக்க எண்ணியுள்ளேன். சமய விரோதமான இயக்கங்கட்கு அரசாங்கத்தார் உதவி செய்கிறார்களா அல்லது கேடு விளைவிக்கிறார்களா என்பதையும் கூடியவரையில் பொதுமக்கள் நன்குணருமாறு விளக்க எண்ணியுள்ளேன்.

நான் சட்டசபை புகுந்ததின் நோக்கம் அரசியல் சீர்திருத்தம் அல்லது அரசியல் துறையில் உழைப்பு அல்லது ஊக்கம் வேண்டும் என்ற கொள்கையோடு பணி இயற்றுவதல்ல. அப்படி நான் அன்றும் எண்ணியதில்லை; இன்றும் எண்ணுவதில்லை. ஆகையால் இந்த சட்டசபையில் எந்தக்கக்ஷி வலையிலும் சிக்கிக்கொள்ள விருப்பமில்லாதவன் என்று சட்டசபைக் காரியதரிசிக்கும் தெரிவித்து விட்டேன்; அதற்கேற்பவே நடந்துகொண்டுமிருக்கிறேன்.

முடிந்தது முடித்தலாக நான் கூறமுன் வந்தது, இனிச் சில மாதங்கள் கழித்து வரும் பொதுத் தேர்தலில் நமது தமிழ் நாட்டினர் சமயப்பற்றும் நல்லொழுக்கமும் நிரம்பியவர்களையே சட்டசபைகட்கு அனுப்புதல் வேண்டும் என்பதே. அத்தகைய சீலர்கள் நமது சட்டசபையில் இல்லாதவரை சமய விரோதமான இயக்கங்களால் நமது நாடு அழிவதுமன்றி, சீர்திருத்தம் என்ற பெயரால் நமது நாட்டு ஒழுக்கங்களெல்லாம் குன்றி மேல் நாட்டவருடைய நாகரிகத்தில் செறிந்து கிடக்கும் பெருங் குற்றங்களே மிகுந்து விடும்.

நான் சட்டசபை புகுந்ததற்குத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்த பலருக்கு எனது நன்றியையும், தங்கள் எச்சரிக்கையையும் வியப்பையும் தெரிவித்த சிலருக்கு எனது நோக்கத்தையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சட்ட சபையில் இன்னம் இரண்டு மாதங்கட்குள் சமயச் சார்பாக நான் செய்யக்கூடிய பணி உண்டு என்று கருதுவோர் நான் செய்ய வேண்டியது இன்னது என்பதை உடனே எனக்குத் தெரிவித்தால் அவர்கள்பால் நன்றியுடையவனாக யிருத்தலோடு அமையாது என்னால் கூடியவரையில் அவர்கள் கொடுக்கும் பணியையும் செய்வேன் என்று உறுதி கூறுகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் அதற்குத் துணை நிற்பதாக.

# வையமெங்கும் சைவம்

ஒரு காலத்தில் நமது தமிழ் மொழி ரோமாபுரி முதலான தேசங்களி லும் பரவி யிருந்தது போன்று சைவ மதமும் அன்னிய நாடுகளிலெல்லாம் பரவி யிருந்ததாகத் தெரிகின்றது. கீழ்க்காணும் தேசங்களில் சிவாலயங் கள் இன்னும் காணக் கிடைப்பதால் தகுந்த சாக்ஷியமாகின்றது.

வட ஆப்பிரிக்கா கண்டத்துள் ஈஜிப்ட் தேசத்திலுள்ள மெம்பீஸ் நகரத்தில் நந்திவாகனன் திரிசூலம் சாம்பவாக்ர சர்ப்பாம்பர தாரியான பரமேசுர விக்ரகமும் பாபிலோன் பட் டணத்தில் 1200 அடி உயரமுள்ள சிவலிங்கமும், ஹைட்டோ போலீஸ் என்னும் பட்டணத்தில் 600 அடி யுள்ள சிவலிங்கமும், மெக்காவில் ஸக மக்கேஸ்வர நாமமுள்ள ஒரு சிவலிங்க மும் ஸம்ஸம் என்னும் கிணற்றில் ஒரு சிவலிங்கமும் இருக்கின்றன. ப்ரஜிஸ் (பிரேசில்)? தேசத்தில் அநேக சிவ லிங்கங்களும், விக்னேசுர மூர்த்தங் களும், காரிந்த் பட்டணத்தில் பார் வதி தேவியின் ஆலயமும், கிளாஸ் கோவில் சுவர்ண கவசத்தினால் போர்க் கப்பட்ட ஒரு சிவலிங்கமும், பிரிஜி யன் தேசத்தில் ஏடன் என்னும் சிவ லிங்கமும், வினியா, யகோதி, சித் ரால், காபூர், பலக், புகார் முதலான இடங்களில் அநேக சிவலிங்கங்களும் இருக்கின்றன. அங்குள்ள ஜனங்கள் பஞ்சாக்ஷர பஞ்சவீர என்னும் பெய ரால் அழைத்தும் அர்ச்சித்தும் வரு கிறார்கள் என்று வீரசைவம் என்ற மாதப்பத்திரிகை கூறுகின்றது.

---

# சிவன் செயலும் சீவன் செயலும்

[வை. கந்தசாமி முதலியார்]

இவ்வியாசம் (1) சிவன் யார்? (2) சீவன் யார்? (3) சிவன் செயல் என்ன? (4) சீவன் செயல் என்ன? என நான்கு வகையாகப் பிரித்து பேசப் படும். இவ்வகை நான்குள் முதலாவ தாகிய சிவன் யார் என்பதை முன்னர் எடுத்து விசாரிப்போம். சிவன் என் னும் சொல் பலபொருள் ஒரு சொல் லாக இருப்பினும் மங்களம் உடைய வன் என்பது அப்பொருள்களுள் சிற ந்த தொன்றாகும். மங்களம் என்பது பூரண ஆனந்தம். எனவே பூரண ஆனந் தம் உடையவன் சிவன். பூரண ஆனந் தம் அறிவு உள்ள வழியே தோன்று வது. ஆதலின் சிவன் பூரண அறிவு உடையவன். பூரண அறிவும் பூரண ஆனந்தமும் என்றும் உள்ளவனுக்கு சித்திக்குமாதலின் சிவன் நித்தியன் எனப்படுகிறான். எனவே சிவன் பூரண ஆனந்தத்தையும் பூரண ஞானத்தை யும் நித்தியத்வத்தையும் உடையவன். இதனைத்தான் சாஸ்திரங்களில் கடவுள் சச்சிதானந்த சொரூபி என்று சொல் வது. இதனை ஒப்புக் கொண்டவரே இறைவனை முற்றும் தெரிந்த மதத் தார்கள். ஏனையவர் ஒரு மதஸ்தர் என்று சொல்லப்படினும் கடவுளை முற்றும் தெரிந்து கூறினவர் அல்லர். சிவன் யார் என்னும் வினவுக்கு என்றும் அழியா நிலைமையையும் நிறைந்த அறி

வையும் நிறைந்த இன்பத்தினையும் உடையவன் என்னும் விடையே முடிவாகும்.

இரண்டாவதாக விசாரிக்க முன் நிற்பது சீவர்கள் யார்? என்பது. சீவர்கள் எனப்படுவார் நாமெல்லோரும். நம்மவர்களுள் அறிவு முதலிய பேதத்தால் பிரிவுகளுண்டு. நம் நிலையோ என்றும் உள்ள நிலை, நாம் ஒருவரால் உண்டு பண்ணப்பட்டவரல்லோம். ஆதலின் நாம் அழியமாட்டோம். பின்னை பிறப்பு இறப்புக்கள் இருக்கின்றனவேயெனின், அவை நம் உடலுக்கேயன்றி உயிருக்கல்ல. நம் அறிவு நிலையோ, காலத்தானும், தேசத்தானும் வெவ்வேறுபட்டுக் குறைந்தும் மிகுந்தும் உள்ள ஒருவித நிலையேயன்றி நிறைந்த அறிவினை உடையவர்களாக நாம் இருக்கவில்லை. இளம் பிராயத்தில் ஒருவித அறிவும், வளர்ந்த காலத்து ஒருவித அறிவும், வளராத காலத்து ஒருவித அறிவும், கல்வி கற்காதபோது ஒருவித அறிவும், அறிவால் முதிர்ந்தாரோடு கூடியபொழுது ஒருவித அறிவும், கூடாதபொழுது மற்றொரு வகை அறிவும் நாம் உடையவர்கள் என்பது ருசுப்படுத்த வேண்டிய அவ்வளவு பெருங் காரியமல்ல வென்பதை நாமெல்லோரும் அறிவோம். நம் அறிவு பூரணப்படாது. எனவே நம் அறிவு குறைந்த அறிவு என்பது நிச்சயம். எப்பொழுது நம் அறிவு குறைந்துள்ளதோ, அறிவினளவுக்குத் தகுந்தபடி ஆனந்தம் உண்டாவது நிச்சயமாகலின், ஜீவர்கள் என்றுமுள்ளவர்களாயினும் குறைந்த இன்பமுடையவர்களென்பதே இரண்டாவது கேள்விக்கு விடையாகும்.

இனிச் சிவன் செயலென்ன? சிவன் நித்தியனாய்ப் பூரண ஞான வானாய்ப் பூரண ஆனந்தியாய் உள்ளவன் என்பது ஏற்பட்டது. நிறைந்த ஞானமும் நிறைந்த இன்பமும் உடையவர் தமக்கென்று ஒரு செயல் உடையரல்லர். என்னையோவெனின், உலகத்துச் செயல்களெல்லாம் துக்கத்தை நிவர்த்தித்துக்கொள்ளவும் சுகத்தை அடையவுமன்றோ ஏற்பட்டுள்ளன. நிறைந்த அறிவுள்ள பொழுது துக்கமேது? நிறைந்த ஆனந்தமுள்ளபோது அடையாத இன்பமேது? எனவே துக்கத்தை நிவர்த்தித்துக்கொள்வதற்கும் சுகத்தை அடைவதற்கும் செயல் செய்ய வேண்டுவனல்லன். மிகு திரவிய முடையவர் தமக்குத் திரவியம் தேடுபவர் அல்லராயினும் திரவியமில்லாதார்க்கு அழியாத திரவியத்திற் சிறிது கொடுத்து அவரையும் செல்வராக்குதலும் கல்வியறிவிற் சிறந்தார் ஒருவர் அஃதில்லாரைக் கண்டு தம் கல்வியறிவை அவருக்குத் தந்து அவரை அஃதுடையவராக்குதலும் வேலை செய்ய வேண்டுவதில்லையானாலும் தம் அதிகாரத்தால் பயனுறும் நமக்குக் கீழ்ப்பட்டாரிடத்து தம் அதிகாரத்தைச் செலுத்தி அவர்கள் செய்ய வேண்டுவனவற்றைச் செய்வித்தலும் நாம் கண்கூடாகப் பார்ப்பது. நிறைந்த அறிவும் நிறைந்த இன்பமுமுடைய சிவன் தனக்கென்று ஒரு செயல் இல்லாதவனாயிருந்தும் குறைந்த இன்பமும் குறைந்த அறிவுமுடையாரை, நிறைந்த அறிவும் நிறைந்த இன்பமு முடையவர்களாக ஆக்குதலே அவன் செய்கையாகும் என்னும் விடையே முடிவாகும்.

நான்காவதாகிய சீவச் செயல் என்பது யாது? என்னும் வினாவிற்கு விடை சொல்வதே இப்போது நம் வேலை. குறைந்த ஆற்றலும் அறிவும் உடையார் சீவர்களென்று ஏற்படும் போது, சீவர்களுடைய செயல் தம் குறைவை நீக்கப் பாடுபடுவதே. அறிவின் குறைவும் ஆற்றலின் குறைவும் நீங்கி, நிறைந்த அறிவும் நிறைந்த ஆற்றலும் பெற்று இன்பமடைய முயற்சிக்கிற சீவர்களுக்கு நிறைந்த அறிவும் நிறைந்த ஆனந்தமும் உண்டாதல் வேண்டுமென்று சிவச்செயலும் துணைசெய்யும் என்று ஏற்படும் போது சீவனுக்குத் தான் எண்ணியவாறே தன் குறைந்த அறிவு நீங்காமலிருக்குமா; பெற்றே விடுமென்பது நிச்சயமன்றோ. எனவே சீவன்கள் செய்ய வேண்டுவது தமக்குள்ள குறைந்த அறிவை யகற்றிக் குறைந்த இன்பத்தைப் போக்கி நிறைந்த இன்பத்தையும் நிறைந்த அறிவையும் பெறுதலேயாகும். இந்நான்கும் சித்தியாக முயற்சித்தலே சீவச்செயலாம்.

---

# இயற்கைத் தத்துவ நூலும் சைவ சமயமும்

[E. T. இராஜேஸ்வரி அம்மாள், B. A.]

இயற்கைத் தத்துவ அறிவியல் நூல், இருபதாம் நூற்றாண்டு வரையில் நாஸ்திகத்திற்கு முதல் நூலாய் எண்ணப்பட்டது. சென்ற நூற்றாண்டு இடையே வசித்த ப்ரொபசர் ஹக்ஸ்லி (Professor Huxley) முதலானோர் பசு, பதி, உண்டென்பதை நம்பவில்லை. எடிஸன் (Edison) "உனக்கு ஆத்மா உண்டா?" என்று ஒருவர் கேட்டதற்கு, "நியுயார்க் (New York) பட்டணத்திற்கு ஆத்மாயிருந்தால் எனக்கும் ஆத்மா உண்டு" என்று சொன்னார். இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டு இயற்கைத் தத்துவ ஆராய்ச்சி நாஸ்திகத்தில் முடியலாயிற்று. ஆனால் இருபதாம் நூற்றாண்டு பிறந்தவுடன் யாவும் மாறலாயின. சர். ஆலிவர் லாட்ஜ் (Sir Oliver Lodge) சர். வில்யம் குரூக்ஸ் Sir Willam Crookes) முதலானோர் செய்த ஆராய்ச்சிகளில் ஜடபதார்த்த வியற்கை இலக்கணத்தைச் சென்ற நூற்றாண்டில் காட்டியவாறு காட்டாமல் வேறு விதமாய்க்காட்டினர். அதாவது அணுக்கள் தூல சூக்கும நிலையே முடிவல்லவென்றும், காரண அணுக்களே பதார்த்த வடிவிற்குக் காரணமென்றும் ஜடபதார்த்தம் எக்காலத்திலும் அழியாது, ஒன்று ஒன்றாய் மாறுமென்று முன்னிருந்த தத்துவசாஸ்திரிகள் கூறியது பொய்யென்றும் கூறிக் காரண அணுக்களின் நிலையும் குணமும் நிரூபிக்கலாயினர்.

## சூக்கும அணுவின் கட்டிடம்

## Atomic Structure

நமது நாட்டிலும், நமது முன்னோர் காலத்தில் சாக்கியம் வழங்குங் காலத்தில் உலகம் அணுக்கூட்டமென்று மொழிந்த இயற்கைத் தத்துவ சாஸ்திரிகள் பலர் இருந்தனர் என்பதைப் பிரமகீதை முதலிய நூல்களில் காணலாம். அதே மாதிரியாக ஐரோப்பிய நாடுகளில் இத்தகைய கொள்கை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வழங்கியது ஆச்சரியமல்ல. இரசாயன சாஸ்

திரத்தால் (Chemistry) உடைக்க முடியாதென்று நிரூபிக்கப்பட்ட சூக்குும அணுக்கள் (Atoms) ஒவ்வொன்றும் இருபதாம் நூற்றாண்டில் ஆராயுங்கால் சூரியமண்டலத்தைச் சுழன்று ஓடும் கோளங்கள் போலும் (Solar System) இயங்குகின்றன என நிரூபிக்கலாயினர்.

அதாவது ஒவ்வொரு சூக்கும அணுவும் இடையிலே ஆண் தன்மை பொருந்திய கனத்த ஓட்டமற்ற ஒரு காரண அணுவும், பெண் தன்மை பெற்ற இலேசான வெகு வேகமாக இடைவிடாது சுழன்று வருகின்ற பரமாணுக்கள் பலவுமாய் இருக்கின்றதென போர் (Bohr) என்னும் தத்துவசாஸ்திரி நிரூபித்தார். இப்பரமாணுக்களின் சூரிய மண்டலத்தைச் சுற்றி சக்தி சொரூபமான பல அணுக்கள் சுழன்று ஓடும் என்பது நூதன ஆராய்ச்சிகளால் புலப்படுகின்றது. இவற்றுள் இச்சக்திகள் இயக்க பேதமே, வஸ்து பேதத்திற்குக் காரணமாகின்றது. ஒரு கரியின் அணுவை ஆராய்ந்தால் பெண் தன்மை பரமாணுக்கள் தொடர்கள் குறைவாய்விளங்கும். இரசாயன சாஸ்திரத்தில் அதே வஸ்து என்று நிரூபித்த வைரத்தின் சூக்கும அணு இத்தகைய பரமா அணுக்கள் பெருது அழுந்திய பரமா அணுக்கள் பொருந்தக் காணப்படுகிறது. பரம (காரண) அணுக்கள் நிலையை மாற்றக் கூடுமெனின் வஸ்துவை மாற்றக்கூடும். ஆதலால் ஒவ்வோர் அணுவும் ஒரு பெரிய அண்டமாக விளங்குகின்றது. மணிவாசகப் பெருமான் கூறுவதாவது :

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்க
அளப் பருந்தன்மை அளப்பெருங் காட்சி
யொன்றினுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
வின்னுழைக் கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியுந்
தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய"

திருவாசகம்.

என்பதாம்.

ஆகையால் ஒவ்வோர் அணுவும் ஒவ்வோர் அண்டமாக ஆராய்ச்சியில் விளங்குகின்றது. அது மாத்திரம் அன்று, திருநாவுக்கரசு நாயனார் திருவையாற்றிற் கண்டறிந்தது போல் எப்பொருளை நாம் எடுப்பினும் அது சிவ சத்தி சொரூபமாக விளங்கும். நமது சூரிய மண்டலத்தையும் அதைச்சுற்றி ஓடும் கோளங்களையும் நோக்கின் சூரியன் சிவத்தன்மையாயும், பூமி முதலிய கோளங்கள் அதையடையும் சத்திகள் எனவும் எண்ணலாம். ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு சூரியன் எனவும் அதைப் பல கோளங்கள் சுற்றி ஓடுகின்றன எனவும் வானசாஸ்திரிகள் கூறுகின்றார்கள். ஆயினும் அவை வெகு தூரத்திலிருப்பதால், நமது இல்லத்தில் நுழையும் சூரியக் கதிரில் காணப்படும் பஞ்சவர்ண ஜோதியுடன் விளங்கும் அணுக்கள் போல் காண்கின்றோம். இவ்வணுக்களுக்கும் நக்ஷத்திரங்களுக்கு முள்ள பேதம் ஒன்றே. இவை அண்மையிலிருந்தும் அறிவிற்கு அதீதமாக இருக்கின்றன; அவை சேய்மையிலிருந்து அறிவிற்கு அதீதமாக இருக்கின்றன.

## சக்தி பாய்ச்சல்
## சிவசக்தி நூதன ஒளிகள்
## (Radiation & Siva Sakti-Xrays)

இனி, பரமாணுவின் சக்தியை ஆராய்வோமாக. இப்போது நூதன வைத்தியத்திலும் பயன் படும்

"எக்ஸ்ரே" (X Rays) யாவருக்கும் தெரிந்ததே. எக்ஸ்ரே என்பது பரமாணுக்களால் எழுப்பப்படும் ஒரு வகை ஒளி. ஒரு சூக்கும அணுவில் வதியும் சத்தி சொரூபமான அணுக்கள் வெகு வேகமாக ஓடுமென்பதைக் கண்டோம். அவற்றின் வேகம் $2.5 \times 109$ C. M. per second. அல்லது 25,000 மைல் ஒரு விநாடியில் ஓடும்.

சத்தி சொரூபமான பரமா அணுக்கள் சூக்கும அணுவிலிருந்து மின்சாரம் மோதுதலால் பிரிந்து "டங்ஸ்டன்" (Tungsten) என்னும் ஒருவித உலோகத்தில் தாக்குமாகில் எக்ஸ்ரே ஒளி உண்டாகிறது. வேறு உலோகங்களிலும் உண்டாகுமானாலும் இதைப்போல் நிலைநின்று ஒளி தராது. ஆதலால் டங்ஸ்டனையே கூலிட்ஜ் டியூப் (Coolidge Tube) முதலியவற்றில் உபயோகப் படுத்துவார்கள். இந்த ஒளியானது சூரிய ஒளிபோல் சுவர் முதலியவற்றால் மறைக்கப் படுவதல்ல. மரத்துக்குள்ளும் இரும்புக்குள்ளும் ஊடுருவிச் செல்லும். இதனாலேயே தேகத்திலுள்ள தசை, எலும்பு முதலிய வற்றிலுள்ள ஒவ்வொரு பொருளையும் இவ்வொளியால் கண்ணாடிப் பெட்டிக்குள் ளிருப்பனபோற் காணலாகும். மின்சாரத்தால் எழுப்பப்படும் எக்ஸ்ரே ஒளிகள்போல் சில ஜட பதார்த்தங்களிலும் இத்தகைய ஒளிகளைக் காணலாமென்பது ஸர். வில்லியம் குரூக்ஸ் (Sir William Crookes) அவர்கள் கண்டுபிடித்த விஷயமாகும். இவ்வொளிகள் பலவகைக் காஸ்மிக் ரேஸ் (Cosmic rays) என்று சொல்லும் சஞ்சீவி ஒளிமுதல் டெத்ரேஸ் (Death Rays) என்று சொல்லும் பெருங்காள விஷஒளி ஈறாக ஆல்பா (alpha rays) பீட்டா; (beta rays) காமா; (gama rays) டெல்டா; (delta rays) ரேஸ் என்று சொல்லப்பட்ட பலவகையாக உள. அவற்றுள் காமா ரேஸ் (gama rays) என்று எடுத்துக் காட்டியவை மிகவும் கொடிய ஒளிகள். ஒரு மனிதனை அரை மணிநேரம் அந்த ஒளி தாக்குமாயின் அவன் பிமனாயிருந்தாலும் பதராகி விடுவான். உலக வழக்கில் கண் திருஷ்டியால் கல்லும் வெடிக்கும் என்பதும் இந்த ஒளியின் உண்மையாலே வந்த தென்னலாம். ஆனால் இத்தகைய கொடிய ஒளிகள் வெளியில் வருவது ஏகதேசம். வந்தாலும் அவற்றின் ஆயுளும் மிகவும் சிறிதே. ஏனெனில் அண்டசராசரங்கள் முழுவதும் அரனுடைய நடனம் நிகழ்வதால், இவை முயலகன் போல் ஒடுங்கிக் கிடக்கின்றன. இக்கொடிய ஒளிகளைச் சொல்ல வேண்டிய காரணம் என்னவெனில், இயற்கைத் தத்துவத்தில் கொடிய வஸ்துக்களை அழிக்க இவை ஏற்பட்டிருப்பன வாதலாலேயாம். கருணாநிதியாகிய கடவுள் துஷ்டர்களை, தான் தண்டிப்பது மில்லை, அழிப்பதுமில்லை. பாபிகள் தங்கள் பாவத்தால் உலகிலுள்ள துஷ்ட சக்திகளை அவாவி அழிகின்றனர். திரிபுர சம்ஹாரத்திற்கு முன்பு தேவர்கள் முப்புரங்களை அழிக்க வேண்டினாரென்றும் அதற்குத் தேர்முதல் ஒவ்வொரு கருவியும் தேவர்களே அமைந்தாரென்றும், எல்லாம் அமைந்தும் எதையும் பயன்படுத்தாமல் சிவபெருமான் நகைத்துத் திரிபுரத்தை அழித்தாரென்றும் புராண மூலமாகக் காண்கின்றோம். இதன் உண்மை என்னவென்று ஆராயும் பக்ஷத்தில்

சிறிது சிலப்பதிகாரத்தில் வெளியாகின்றது.

" திரிபுர மெரியத் தேவர் வேண்ட
வெரிமுகப் பேரம் பேவல் கேட்ப
வுமைய வளொரு திறனாக வோங்கிய
விமைய வனாடிய கொடுகொட்டி யாடலுந்
தேர்மு னின்ற திசைமுகன் காணப்
பாரதி யாடிய வியன் பாண்டரங்கமும் "

எனக் கூறப்பட்டு இருக்கின்றது. திரிபுர சம்ஹாரத்திற்கு இன்றியமையாத கூத்து ஒன்றைக் கூத்தன் ஆடினான். ஏன் ஆடவேண்டும்? திரிபுரம் எரியுமாறும் திரிபுரங்கள் வந்தவுடன் அவற்றின் வருகையாலே இச் சக்தியை அவை ஈர்த்து ஏற்குமாறும், ஏற்றதே எரியுமாறும் இக்கூத்து ஆடினாரென்பது திண்ணம். பயனில் தொழில் பரமன் புரிவாரல்லர். ஆதலால் பாண்டுரங்கக் கூத்தானது தேவர்கள் அறியாச்சக்தி ஒன்றை முன்னிலையில் எழுப்பி வைத்தது. திரிபுரம் வரவும் காந்தம் இரும்பை ஈர்ப்பதுபோல் இச் சக்தி ஈர்க்க முப்புரங்களும் சாம்பலாயின. இக் காலத்திலே பரமன் நகைத்தார்.

திரிபுரத்தை எரிப்பதற்காக நகைத்தாரென்பது உபசரணை. கோப நகையெனின், மனிதர் குணமாம், பரமனுக்கு ஏலாது. "துஷ்டராயின பேய்கள் சூழ நடமாடும்" அச்சுந்தரருக்குக் கோபம் என்பது பொருந்தாது. இவர் சத்துவமூர்த்தி ஆதலால் நகைத்தது எதற்கோவெனில் (i) இவ்வாறு மூடத்தனத்தால் திரிபுரம் நாசமாயிற்றே என்பது ஒன்று (ii)நானென்னும் அகந்தை பெற்றுத் தம்மாலே திரிபுர சம்ஹாரம் ஆகுமென்று தேவர்கள் நினைத்தார்களே என்பது மற்றொன்று (iii) கருணாநிதியாய், நன்மை யன்றி தீமை தாராத நமக்கு திரிபுர சம்ஹார வேலை வைத்தார்களே என்பது மற்றொன்று. இவ்வாறு பற்பல காரணங்களாலே நகைத்திருக்கலாமே யன்றி அழிப்பதற்காகச் சிரிக்கவேண்டியதே யில்லை. இதை திருநாவுக்கரசு நாயனார்,

" விரித்த பல்கதிர்கொள் சூலம்
வெடிபட தமருகங்கை
தரித்ததோர் **கோல கால
பயிர**வனாகி வேழம்
உரித்துமை யஞ்சக்கண்டு வொண்டிரு
மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே"

என்றார். ஆதலால் தீயவை யழிய தீய சக்திகள் உண்டாய் கருணாநிதி சன்னிதானத்தில் இரண்டும் மாளும் என்பது வெளியாகின்றது.

## கம்பியற்ற தந்தியும் தேவசக்தியும்

## Wireless in relation to Divine Powers

கடவுள் ஜோதி மயமென்றும் எங்கும் நிறைந்தவரென்றும் சொல்லப் படுகின்றாரே அப்படியாயின் நமது கண்ணுக்குப் புலப்படாத காரணம் என்னவென்பர் நாஸ்திகர். தற்காலத்தில் இயற்கைத் தத்துவ நூலில் ஒலி, ஒளி இவற்றின் இலக்கணம் எவ்வாறு நிரூபிக்கப் படுகிறதென்று ஆராய்ந்தால் இதற்கு விடை வெகு சுலபமாகப் பகரலாகும். உலகத்திலிருக்கும் ஒளிகள் பல. அவைகளில் காணப்படுவன சில. உலகத்திலிருக்கும் ஒலிகள் பல. அவற்றிற் கேட்கப்படுவன சில. மிகவும் அந்தகாரமான அமாவாசை இரவில் இருட்டறையில் ஓடும் ஒரு கறுப்பு எலியை ஒரு பூனை வெகு சுலபமாகப் பிடித்து விடுகிறது.

நமக்கோ பக்கத்திலிருக்கிற வஸ்து இன்னதென்று தெரியவில்லை. ஏனெனில் சிறு ஒளி பூனையின் கண்ணுக்குப் போதுமானது நமக்குப்போதாது. ஒவ்வொரு ஒளியும் கண்ணைத் தாக்குவதற்கு முன் தரங்க அளவு இவ்வளவு இருந்தால் தான் இக்கண்ணைத் தாக்குமென்று அறிவியல் நூலார் கண்டு பிடித்தனர். அதாவது, வான வில்லில் காணப்பட்ட ஏழு வகை வர்ண வெளிச்சங்களில் வயலெட் (Violet) என்னும் ஒருவகை நீலமுதல் இறுதியில் காணப்பட்ட சிவப்பு வரையிலுள்ள தரங்க அளவுகளே நமது கண்ணைத் தாக்கக் கூடியனவாம். இவ்விரண்டு அத்துக்களுக்கும் அப்புறப் பட்டவை நமது கண்ணைத் தாக்கா. தரங்க அளவுகள் 30 மைலிலிருந்து அங்ஸ்டிரம் (Angstrom Unit) யூனிட் என்று சொல்லப்பட்ட (1 × 10—8 Cms) ஓர் அங்குலத்தில் 100 கோடியில் ஒரு பாகம் வரையில் பல வகுப்புக்களாய் நிற்கின்றன. முதல் வகுப்பு இக்காலத்தில் கம்பி யில்லாத தந்தி என்று சொல்லும் (Wireless) மின்சாரத்தில் பயன்படுவது. இது ஓசையின் கோடியம்ஸ பின்னமான பின்னத்தை உலகத்தில் எத்தலத்தினின்றும் எத்தலத்திற்கும் எடுத்துச் செல்லத்தக்கதாம். கம்பியில்லாத தந்தி என்னும் கருவி பல பக்கங்களிலும் செல்லும் நாதத்தை ஒருங்கு சேர்த்து ஓசையாக்கி அவ்வோசையால் தந்தி சமாச்சாரம்போல் தெரிவிக்கும். கடலிடையும் மின்சார தபால் பெறுகின்றோம். சுந்தரமூர்த்தி நாயனார் கடவுளை இயற்கைத் தத்துவ இலக்கணத்தில் துதி செய்யும்போது,

“நாதனை நாதமிகுந் தோசைய தானவனை
ஞானவிளக் கொளி யாமூனுயிரைப் பயிரை
மாதனை மேதகு தன்பத்தர் மனத்திறையும்
பற்று விடாதவனைக் குற்றமில் கொள்கைய [னைத்
தூதனை யென்றனை யாடோழனை நாயகனைத்
தாழ்மகரக் குழையுந் தோடு மணிந்ததிருக்
காதனை நாயடியே னெய்துவதென்று கொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே”

நாதம், ஓசை, ஒலி என்றது மூன்று அந்தஸ்து. ஓசை என்பது சமீபத்தில் கேட்கக் கூடியது. டெலிபோனில் (Telephone) கேட்கக் கூடியது. ஒலி என்பது வெகு தூரத்தில் கேட்கக் கூடியது. ஓசை ஒலியுமே நம் காதுக்கு எட்டக்கூடியன.

ஓசையின் தரங்க அளவு குறையுமாயின் நமது காதுக்குக் கேளாது. ஒரு வெண்கல மணியை அடித்து விட்ட பிறகு நமக்கு ஓசை கேட்பதில்லை. ஆயினும் ஓசை நமக்குகேளாது விட்ட பொழுதிலிருந்து அரை நிமிஷம் பொறுத்து நமது காதை அம் மணியினிடம் வைப்போமானுல் “உம்” என்கின்ற சிற்றோசை கேட்கலாம். ஒலியும் மிகப் பேரொலியாயின் நமது காதில் படாது. கோளங்கள் மிக வேகமாக ஓடுவதனால் பேரொலி கிளம்பினும், நமது காதில் விழுவதில்லை. எங்ஙனமெனின், சமுத்திரக் கரையில் வசிக்கும் பட்டினவர்களுக்குச் சதா சமுத்திர ஒலி தாக்கப்படுவதால் அவர்கள் அதை அறிவதே யில்லை. அது போல் நாம் சதாபெரிய ஒலியில் இருப்போமாயின் அந்த ஒலியின் அனுபோகமே யிராது. ஆதலால் நமது கண்ணுக்காகிலும், செவிக்காகிலும் ஏற்பட்ட அளவுகள் எவ்வளவோ அவ்வளவு தரங்கமுள்ள ஒளி, ஒலி, காணல் கேட்டல் கூடுமேயன்றி அவ்வளவுக்குச் சிறுத்ததும் பெருத்ததும் அறிய நமக்குப் புலன்களில்லை. பூனை

காணக்கூடிய ஒளி நமக்குப் பயன்படா தெனின், ஓர் அணுவுக்குள் ஜொலிக்கும் ஒலியை நாம் காணக்கூடுமோ? அதே மாதிரியாக கோடி சூரியப் பிரகாசமான வஸ்துவை நாம் காணக்கண் உண்டோ? எங்கும் நிறைந்த கடவுள் ஜோதியாய் விளங்குவது உண்மையே. அச்சோதியைக் காண நமக்குக் கண்ணில்லாததால் அச்சோதி இல்லையென்று கொள்ளலாமோ? சம்பந்த மூர்த்தி நாயனார் கடவுளை அநுமானப் பிரமாணத்தில் காட்டலாகா தென்றார். ஏனென்றால் சிவபெருமான் பிரத்தியக்ஷ உண்மை. அநுமானப் பிரமாணத்தில் காணலாகாது. அநுமானப் பிரமாணம் எப்பொழுது பயன்படுமெனில் "சேய்மையிலுள்ள வஸ்து எது?" என்று ஆராய்வதற்குப் பயன்படும். அண்மையில் பிரத்தியக்ஷமான வஸ்துக்கு அநுமானப் பிரமாணம் பொருந்தாது. தூரத்திலுள்ள மலையில் புகை காணப்படுவதால் நெருப்பு உண்டென்று அநுமானிக்கலாம். எதிரிலுள்ள தீக்கு என்ன அநுமானம் காட்டுவது? காணாதவர்கள் காணாதவர்களே, கண்டவர்கள் கண்டவர்களே.

"கூட்டினார் கிளியின் விருத்த
முரைத்ததோ ரொலியின் றொழிற்
பாட்டு மெய்சொலிப் பக்கமே
செலுசெக்கர் தங்களைப் பல்லறம்
காட்டியே வருமாடெலாங் கவர்கை
யரைக் கசிவொன் றிலாச்
சேட்டைகட் கெளியே னலேன்
திருவால வாயர னிற்கவே"

சிவபெருமான் உண்டென்பதற்குப் பக்கம் அதாவது பக்ஷம் சொல்லுவதற்கு முடியுமோ?

புகலி வேந்தன் (சம்பந்தன்) சிவபெருமானைப் பிரத்தியக்ஷத்தில் காண்கின்றேன், என்ன அத்தாட்சி வேண்டும் என்றார். சமணர் நெருப்பில் உமது தேவாரத்தை இடும் என்றார். இட்ட ஓலை பச்சென்றிருந்தது. ஏனெனில் நெருப்புக்கு அதைத் தாக்கும் சக்தி போய் சிவத் தன்மையாய் ஒழிந்தது. பச்சென்று காணப்படும் ஓலையும் நெருப்பின் குணம் பெற்றிருந்ததால் நெருப்பால் நெருப்பழியவில்லை. சமணரிட்ட ஓலை நீறாயிற்று. ஆதலால் பிரத்தியக்ஷத்திலிருந்த ஜோதியைக் கண்ட சம்பந்தர் நெருப்பின் குணத்தை மாற்றலானார். இதைச் சமணர்கள் நெருப்புக் கட்டு வித்தையென்றார்கள்.

ஒரு குழந்தையானது கண்ணைத் திறந்து உலகத்தைப் பார்க்கும்போது எவ்வளவு ஆநந்திக்கிற தென்றும் பார்க்கலாம். எல்லாம் கடவுள் ஜோதியாகக் காணப்படும். அதனால் அது களிக்கிறது, நகைக்கிறது. நாமும், நாம் இருக்கும் தலம் விட்டு நூதன ஸ்தலத்திற்குப் போவோமாயின், அங்கு காணும் தோற்றங்கள் நமக்கு ஆச்சரியமாகவேயிருக்கும். ஆனால் குழந்தை காணும் ஆச்சரியம்போல் அவ்வளவு உண்டாவதில்லை. ஏனெனில் குழந்தை வளர, வளர உலகபாசத்தில் கட்டுப்பட்டு எங்கும் விளங்கும் பரம ஜோதியை மறக்கின்றது. ஊனக்கண் ஞானக் கண்ணாயின் அணுவுக்கு அணுவிலும் மகத்துக்கு மகத்திலும் இந்த ஜோதியைக் காணலாம். இன்றேல்,

"பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்"

ஆகையால் கடவுள் பிரத்தியக்ஷத்திலிருந்தும் நாம் காணாதிருப்பது நமது தோஷமேயாம்.

## அனலும் அதன் தத்துவமும்

முன்னரே ஒவ்வொரு பரமாணுவும் சிவசக்தி சொரூபமாய் விளங்கு

கிறதென்று கூறினேன். சிவத்தன்மை யானது ஜோதி வடிவம். உஷ்ணம் இன்றேல் ஜீவன் இன்றும். ஒரு மனி தன் இறந்தானென்பது உஷ்ணத் தாலே அறியப்படும். சாதாரணமான உஷ்ணம் நீங்க உயிர் நீங்குவது போல் எவ்வஸ்துவை எடுப்பினும் உயிரற்ற பதார்த்தமேனும் உஷ்ணம் முழுமை யும் அற்றுவிடுமாயின் உருவே அற்று விடும். உஷ்ணமானது பனிக்கட்டியிலு முண்டு. பனிக்கட்டி உஷ்ண அள வைக் கருவியில் (Centigrade Thermometer) சைபர் காட்டும். ஆயினும் தற்காலத்தில் காற்றை நீராக்கி (Liquid air) இருக்கின்றார்கள்; அத் தகைய நீரில் ஒருதுண்டு பனிக்கட்டி போடுவோமானால் நெருப்பு இட்ட நீர் போல் அந்நீர் (Liquid air) கொதிக்கும். இதனால் பனிக்கட்டி யும் உஷ்ணமுடையதென்று ஏற்படும். பனிக்கட்டி உறையும் நிலையிலிருந்து தண்ணீர் கொதிக்கும் நிலை வரை யில் (From O· Centigrade-melting point office to 100· Centigrade Boiling point of water) நூறு படி கள் இருப்பதுபோல் பனிக்கட்டி உறையும் நிலையின்கீழ் இருநூற்று எழுபத்து மூன்று (-273·C. absolute zero) படிகள் இருக்கின்றனவென இயற்கைத் தத்துவநூல் நிபுணர்கள் கூறுகின்றனர். இவ்விரு நூற்று எழு பத்துமூன்று படியிலும் ஒரு வஸ்து இறங்குமாயின் அதன் உருவம் குணம் யாவும்போய் வஸ்துவே ஸ்தூலமாய் இல்லாமற் போய்விடும்.

ஸ்தூலத்தில் வஸ்து அழிவது உண் மை என்பதை ரேடியம் (Radium) யுரேனியம் (Uranium) முதலான லோகங்களால் நிரூபிக்கலாம். சக்தி குறையக்குறைய எவ்வஸ்துவும் அழிவு காலத்திற்குச் சமீபிக்கிறது. உயிருள்ள பொருளாயினும் சரி, உயிரற்ற பொரு ளாயினும் சரி சட்டம் ஒன்றே. சக்தி யால் பொருள் நிலைப்பதும் பொருளே சக்திகள் அவாவுதலும் நம்முன்னோர் வேறு வகையால் மொழிந்தனர்.

"சிவன் சக்திதன்னை ஈன்றும்
சக்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும் புணர்ந்திங்
குலகுயிர் எல்லாம் ஈன்றும்
பவன் பிரமசாரி யாகும்
பான் மொழிகன் னியாகும்
தவந்தரு ஞனத் தோர்க்கு
இத்தன் மைதான் தெரியுமன்றே"

என்றார் அருணந்தி சிவாசாரியார்.

## ஓசையும் பண்ணும்

## Sound & Music

உஷ்ணமானது சக்தி. அது நவசக்தி என்றோம். இவ்வுண்மையே தழலாய் சிவ பெருமான் திகழ்கின்றாரென்று தேவாரத்தில் ஆங்காங்கு மொழி யப் படும். உஷ்ணம் ஸ்தூல அணுக் களை உடைப்பதற்கும் கூட்டுவதற்கும் இன்றி அமையாத கருவி. இதுபோல் சூக்கும அணுக்களை உடைக்கவும் கூட் டவும் இரசாயனத்துணைவேண்டும். பர மாணுக்களைப் பகுக்கவும் சேர்க்கவும் கருவியாது? இன்னும் ஐரோப்பிய அறி வியல் நூல்கள் கண்டுபிடிக்கவில்லை. ஆயினும் யுக்திக்குப் பொருத்தமான சுருதிகள் நமது சைவத்தில் உண்டு. அதாவது எவற்றால் ஆகாதகாரியமும் தமிழ்ப் பண்ணால் ஆகுமென்பதே.

(i) சமணர் ஏவிய யானையை அப்பர் வெருட்டியது காந்தாரப் பண்ணுகும். (ii) விஷம் தீர்த்த பதிகங்களின் இசை யாலேயே, அப்பரும் சம்பந்தரும் பாம்பால் இறந்தவர்களை எழுப்பினர்.

(iii) திருஞான சம்பந்தரும் தீயிலிட்ட தன் ஏட்டை உஷ்ணம் தாக்காது பரமாணுக்களுக்கு உரம் (Tone) கொடுத்தது அவருடைய இசையேயாகும். இசையே கடவுள் வடிவம் என்று சம்பந்தர் கூறி யிருக்கின்றார்.

" ஈறாய் முதலொன்றா
யிருபெண்ணாண் குணமூன்றாய்
மாறா மறைநான்காய்
வருபூதம் மவையைந்தாய்
ஆறார் சுவையே ழோசை
யெட்டுத் திசைதானாய்
வேறா யுடனானிடம்
வீழிம் மிழலையே." (i)

" பண்ணும் பதமேழும்
பலவோ சைத்தமிழவையும்
உண்ணின்ற தோர்சுவையும்
முறுதாளத் தொலிபலவும்
மண்ணும் புனலுயிரும்
வருகாற்றுஞ் சுடர்மூன்றும்
விண்ணும் முழுதானனிடம்
வீழிம் மிழலையே." (ii)

நமது சித்தாந்தத்தில் மாத்திரம் அன்று. புராதீன கிரீக்கர் (Greeks) காவியங்களில், அப்பாலோ (Apollo-The Sun, God of music) என்னும் பானுமூர்த்தி தான் குழலூதி டிராய் (Troy) என்னும் பட்டணத்தை எழுப்பியதாகக் காண்கின்றோம். பராசக்தியானது பிரளயகாலத்தில் சிவபிரானில் ஒடுங்கும்போது உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் சத்தியால் உண்டாகும் இயக்கமற்று அழியும். பிரமனும் மாள, விஷ்ணுவும் மாளத் தனியாய் நின்ற பரமன், மறுபடியும் உலகத்தை வெளியிற்கொண்டுவர என் செய்வாரென்பதைத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணலாம். பிரளயத்தை நீக்க அவர்கையில் வீணையன்றி வேறொரு கருவியுமில்லை. அதன் இசை தவிர வேறொரு துணையுமில்லை.

" பெருங்கடன் மூடிப் பிரளயங்
கொண்டு பிரமனும் போய்
இருங்கடன் மூடி யிறக்கு
மிறந்தான் களே பரமும்
கருங்கடல் வண்ணன் களே
பரமுங் கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீள நின்றெம்
மிறை நல்வீணை வாசிக்குமே"

## முடிவுரை
## Conclusion

ஆகையால், தற்காலத்தில் இயற்கைத் தத்துவ நூலில் மேற்கண்டவாறு மின்சார அத்தியாயத்திலும், ஒலி, ஒளி, ஓசை என்கின்ற அத்தியாயங்களிலும் ஏற்பட்ட நூதன ஆராய்ச்சிகள் சைவசமய உண்மைகளை நிலைநிறுத்திக்கொண்டு வருகின்றன. இப்போது இவ்வறிவியல் நூலுக்கும் சைவத்திருமுறை களுக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலுள்ள அவ்வளவு வேற்றுமை இல்லை.

சைவசமயத்தை இயற்கைத்தத்துவ நூல் சமீபத்துக்கொண்டே வருகின்றது. இன்னும் பல அறிஞர்கள் இந் நூற்றாண்டில் ஆராய்ச்சிகளில் செல்லச்செல்ல சைவமறைகளும் அறிவியல் நூலா? இயற்கைத் தத்துவ அறிவியல் நூல் சைவமறையா? என்னும் சந்தேகம் உண்டாக்கும் நிலைக்கு வருமென்று நம்புகின்றேன்.

குறிப்பு:—இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளவை யனைத்தும் சைவசித்தாந்தத்துக்கு முற்றிலும் பொருத்தமென்று கற்றுத் துறைபோகிய சைவசித்தாந்திகள் ஒப்புக்கொள்ளார். ஆயினும் இவ்வம்மையார் கூறும்வண்ணம் நமது சமயத்துக்கும் அறிவியல் நூலுக்கும் உள்ள பொருத்தங்கள் மிகுந்தும் வேற்றுமைகள் குறைந்தும் வருகின்றன வென்பதை எவரும் மறுக்க வியலாது. இக்கட்டுரையிற் கண்ட பல பொருள்கள் இம்முடிபுக்கு அரண் செய்யும். அறிவியல் பயின்றோர் சமயத்துறையிலும் சமயவல்லுநர் அறிவியற்றுறையிலும் நுழைந்து ஆராய்ச்சி செய்தற்கு இத்தகைய கட்டுரைகள் துணை செய்தலால் இதை மிக மகிழ்ச்சியோடு வெளியிடலானோம்.—பத்திராசிரியர்.

# சேரன் செங்குட்டுவன்

[C. S. இராஜா பிள்ளை]

தமிழ் வேந்தர் மூவருள் சேரவம்சம் ஆதியில் எங்கிருந்து உற்பத்தி யாயிற்றென்று கூறமுடியாது. ஆனால் சோழபாண்டியர்களை முறையே சூரிய சந்திர வம்சமென்று கூறும் வழக்கு பண்டை நாள் முதல் வழங்கி வருகின்றது. ஆனால் பிற்காலத்தவர் சேரரை அக்கி வம்சத்தவரென்று கூறுவர். அதற்குப் புராதன ஆதாரங்கள் இன்மையின் அவ்வழக்கு நம்பத்தக்கதல்ல. இனிச் சேரற்கு வானவரென்னும் பெயர் வழங்கிவருதலானும், சோழ பாண்டியர்களுக்கு முன் சேரருடைய பெயர் குறிக்கப்படுகின்றதாலும், இவ் வம்சம் தெய்வத் தொடர்புடையதென்று கூறவேண்டி இருக்கின்றது.

புறநானூறு தொகுத்தபுலவர்களும், சேரமன்னர்களைக் குறித்த பாடல்களை முன்னரமைத்து ஏனைச் சோழ பாண்டியர்களுடைய பாடல்களைப் பின்னரமைத் திருத்தலினாலும், சிறுபாணாற்றுப்படையில்,

"குட்டுவன்செழியன் செம்பியன்"

என்றே கூறப்படுதலினாலும்,

தொல்காப்பியத்தில்,

"போந்தை வேம்பே ஆரண வரூஉம்
மாபெருந் தானையர்"

எனக் கூறுதலானும் இக்கொள்கை இன்னும் வலியுறுத்தப் படுகின்றது.

இனி தலைச்சங்கப் புலவராகக் கருதப்படும் **முரஞ்சியூர் முடிநாகராயர்** என்பவர், **"உதியஞ் சேரல்"** என்னும் சேர அரசனைப்பற்றி,

"அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்
[தோய்"

எனப் பாடியதனாலும்,

சிலப்பதிகாரத்து இளங்கோவடிகள்,

"ஓரைவ ரீரைம்பதின் மருடன் றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தான
[ளித்த சேரன்"

எனப் பாடியதனாலும்,

மகாபாரத காலத்துச் சேரமன்னர்கள் சீர்பெற்று விளங்கியவ ரென்று தெரிகின்றது.

இனிச் சேர அரசர்களைப்பற்றியே கூறப்படுகின்ற பதிற்றுப் பத்து என்னும் நூலை ஆராயும் வழி அதனுட் காணப்படும் அரசர் எண்மர். அவர்கள் :—

1. இமய வரம்பன் நெடுஞ்சேர லாதன்.
2. பல்யானைச் செல்கழுக் குட்டுவன்.
3. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்.
4. கடல்பிறக் கோட்டிய **செங்குட்டுவன்**.
5. ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்.
6. செல்வக் கடுங்கோ வாழியாதன்.
7. பெருஞ் சேரலிரும் பொறை.
8. இளஞ் சேரலிரும் பொறை.

இவ்வரசர்களுள் நான்காவதாகக் கூறப்படுகின்ற செங்குட்டுவனே நமது ஆராய்ச்சிக்குரியவனாவான்.

பதிற்றுப்பத்து இரண்டாம் பதிகத்திற் கூறப்படும் **'இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனே'** செங்குட்டுவன் தந்தை யென்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

இனி செங்குட்டுவனைப்பற்றி விரிவாக ஆராயுமிடத்து மிகப்பெருகுமாகலின் ஒருவாறு அவற்றைச்சுருக்கி

முக்கியமான சிலவற்றைக் கூறுவோமாக. அவை,

க. செங்குட்டுவன் போர்ச் செயல்கள்
உ. செங்குட்டுவன் சமய நிலை
ங. அவன் காலத்திருந்த அரசர்கள்
ச. அவன் காலத்திருந்த புலவர்கள்
ரு. செங்குட்டுவன் குணாதி சயங்கள்
சு. செங்குட்டுவன் அரசியல்
எ. சேரநாட்டுத் தலைநகர்
அ. காலம்.

என்பனவாம்.

## க. போர்த்திறன்

செங்குட்டுவன் 55 வருஷங்கள் ஆட்சிபுரிந்தானென்று பதிற்றுப்பத்தில் கூறப்படுதலால் சுமார் 75 வயது வரை உயிரோடு இருந்தவனாகக் கருதலாம். இவற்றிற்கிடையில் பல போர்கள் செய்து தன் தந்தையைப் போல் பெரும் புகழ் படைத்திருந்தான். அவை யனைத்தும் விரிப்பிற்பெருகும். ஆயினும் சுருக்கமாகச் சிலவற்றை ஈண்டு கூறுவாம்.

1. தன் தாயைக் கங்கை நீராட்டச் சென்ற போது வடநாட்டினரோடு ஆங்கு நடத்திய போர்.
2. கொங்கர் செங்களத்து நடத்தியபோர்
3. கடல் வழியேசென்று நடத்தியபோர்
4. பழையனுடன் நடத்தியபோர்
5. ஒன்பது சோழருடன் நடத்தியபோர்.

இவற்றின் விரிவைச் சிலப்பதிகாரம், புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய நூல்களிற் காண்க.

## உ. செங்குட்டுவன் சமயம்

இவன் மிக்க சைவ அபிமான முள்ளவனென்பதும், சிவபெருமான் திருவருளால் உதித்தவனென்பதும் அவனருளால் விளங்கியவனென்பதும்,

"செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ கேளாய் !"

"ஆனேறு யர்த்தோ னருளினால் விளங்க
மாநிலம் விளக்கிய மன்னவன்"

எனவரூஉம் சிலப்பதிகார வாக்கியங்களால் விளங்கும்.

இனி இவன் வஞ்சியினின்றும் புறப்பட்டு வடநாடு போந்த காலை சிவபெருமானை வழிபட்டு அவர் திருவடியைத் திரு முடியிலணிந்து சென்றானென்றும், அப்போது திருவனந்தபுரத்து வைணவர்கள் மகா விஷ்ணுவின் பிரசாதங் கொண்டுவர அவற்றைத் தன் தோளிலணிந்தானென்றும் கூறப்படுதலான் சைவ அபிமானம் மிகுதியும் உடையவனென்று தெரிகிறது.

இதனைச் சிலப் பதிகாரம்,

"தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின னாகி................"

என்று கூறி யிருத்தலான் விளங்கும்.

இவனுடைய காலத்து யாவரும் தங்கள் தங்களுக்கு இஷ்டமான மதத்தைத் தழுவி யிருந்தனர். ஒருகுடும்பத்திற் பிறந்த பலரும் ஒரே மதத்தினராக யிருக்க வேண்டு மென்ற நிபந்தனை இவனிடம் கிடையாது.

இளங்கோவடிகள் ஜைன சமயமென்றும், சாத்தனார் பௌத்தமென்பதும், கோவலன் கண்ணகி சமணமென்பதும் அறியப்படும்.

## ங. அவன் காலத்திய அரசர்கள்

புகார்ச் சோழரும் உறையூர்ச் சோழருமாகிய, நெடுங்கிள்ளி, கிள்ளி வளவன், நலங்கிள்ளி, மலையமான் திருமுடிக்காரி முதலிய சோழமன்னர்களும், ஆரியப் படைதந்த நெடுஞ்செழியனும், வெற்றிவேற்செழியனும்

ஆகிய பாண்டியர்களும், கொங்கிளங் கோசர் நூற்றுவர்கன்னர், கயவாகு முதலியோரும் இவன்காலத்தவராவர்.

## ச. அவன்காலத்திய புலவர்

அவன் காலத்திய புலவர் பலராயி னும் சங்கத் தொகை நூல்களில் மிகச் சிறப்புடைய பல பாடல்களைப் பாடிய பரணரும், மதுரைக் கூலவாணிகன் சாத்தனரும் முக்கியமானவராவார் கள்.

## ரு. சேரன் அரசியல்

இனி இவ்வரசனுடைய அரசியலை நோக்குமிடத்துப் பண்டைச் சங்க நூல்களில் அரசியல் முறைகளாக அமைந்தன யாவும் செங்குட்டுவனு க்கு அமைந்திருந்தனவென்றே சொல்ல லாம். அவையனைத்தும் விரித்துக் கூறின் பெருகும். ஆதலின் சுருக்கிக் கூறுவோம் :—

நமது சேரர் பெருமான் தமிழ் நாட்டு வேந்தருள் தலைசிறந்து விளங் கியவன். தன் தந்தை நெடுஞ்சேரலா தனைப் போலவே வடநாட்டு மன்னர் களுடனும் மற்றும் பிற மன்னர்களுட னும் போர்செய்து வாகை மாலை சூடிய வனென்றே தெரிகிறது. இவன் கடல் வழியாகவும், தரை வழியாகவும் பகை வர் தம் எல்லையுள் புகாதபடி தடுப் பதற்கேற்ற கப்பற்படையும் தரைப் படையும் உடையவனெனத் தெரி கிறது.

இஃது புறநானூறு,

“சினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய ஞான்றை
பிறர்கலம் செல்க லாது.........”

எனக் கூறுவதாலறிக.

இவன் பத்தினித் தெய்வத்திற்குக் கல் கொணருமாறு 32 மாதங்கள் வட நாட்டுக்குச் சென்று வந்தகாலை அவன் நாடு யாதொரு குழப்பமுமின்றி அமைதியாக இருந்ததே அவனது அரசியல் முறையை விளக்குதற்குப் போதிய சான்றாகும்.

“ஐம் பெருங் குழுவும் எண்பே ராயமும்”

எனக் கூறும் முற்கால வழக்கப்படியே இவனுக்கும் அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதுவர் முதலிய ஐவரும், கருமவினைஞர் முதலிய எண் மரும் இருந்தார்கள என்று தெரி கிறது. இவன் அரசவை அடையுங் காலத்துத்தன் மனைவியுடன் வருவான். அவ்வம்மையாரும் அரசியல் முறை களில் தன்கருத்தை வெளியிடும் உரி மையுடையவளாக இருந்தாள். அரசன் பிறந்த நாளைப் பெருமங்கல நாளாக நகரத்தார் கொண்டாடுவர். போருக் குப்புறப்படுங் காலத்துப் படைகளுக் குப் பெரு விருந்தொன்று செய்தல் இவன் வழக்கம். இவனது யாத்திரை மிகுந்த அழகும் ஆடம்பரமு முடைய தாயிருக்கும்.

## சா. குணாதிசயங்கள்

இவ்வரசன் சைவப்பற்று மிகுதியு முடையவனா யிருந்தும், திருமால், பிர மன் முதலிய தெய்வங்களிடத்தும் அன்புள்ளவனா யிருந்ததும், அந்தணர், சான்றோர், முனிவர் முதலியோரிடத் தும் மிகுந்த அன்புடையவனா யிருந்த தும் முன்னமே தெரிவிக்கப்பட்டன. இவைகளன்றி, பத்தினி தெய்வத் திடம் இவன் கொண்டிருந்த அன்பு மிகவும் போற்றற்குரியது. இவனது ஏகபத்தினி விரதமும் இவனது சிறந்த குணத்திற்கு ஓர் அடையாள மாகும்.

செங்குட்டுவனைப் பற்றிப் பாடிய புலவர்களெல்லாம் அவனது போர்த்

திறன் ஒன்றனையே குறித்துப் பாடுதலால், அவன் வீரத்தன்மை மிகுதியுங் கொண்டவனென்று விளங்குகின்றது.

இனிக் கோவலன் அநீதியாக இறந்தான் என் பதைக்கேட்ட பாண்டியன் அப்பொழுதே உயிர் நீத்தான் என்பதைச் சாத்தனார் என்னும் புலவராற் கேட்ட செங்குட்டுவன் அவ்வரசனது நிலைமைக்கு நொந்து,

"எம்மோ ரன்ன வேந்தர்க் கிற்றெனச்
செம்மையி னிகந்த செவிப்புலம் படாஅமுன்
உயிர்பதிப் பெயர்ந்தமை யுறுக வீங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது
மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுத வில்லை"

எனக் கூறிப்போந்த வார்த்தைகள் எவ்வளவு உயர்வும் உருக்கமும் உடையன பாருங்கள்!

இவன் தன் நாட்டுக் குடிகளை மிகவும் அபிமானித்து ஆட்சி புரிபவன். அதை ஒரு காலத்து இவன் செய்த சபதத்து,

"வறிய மீளும் என்வாய் வாளாகில்
குடிநடுக் குறூஉம் கோலே னாகுக!"

என்னும் வார்த்தைகளா லறிக.

## எ. தலைநகர்

செங்குட்டுவன் ஆண்ட சேரநாட்டின் தலைநகரத்தைப் பற்றிப் புலவர்கள் இரண்டு விதமாக அபிப்பிராயப் படுகிறார்கள்.

மதுரை, மு. இராகவையங்கார் அவர்கள் செங்குட்டுவனும், அவன் முன்னோரும் வாழ்ந்த சேரநாட்டின் தலைநகர் 'கரூர்' என்றும், அதற்கே 'வஞ்சி' என்னும் ஓர் பெயருண்டென்றும் கூறுகின்றார்.

"1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்" என்னும் புத்தகத்தை ஆங்கிலத்தில் எழுதிய கனகசபைப்பிள்ளையவர்கள், மேல் கடற்கரையிலுள்ள 'திருவஞ்சைக் களம்' தலை நகரென்று கூறுகின்றார். இவை அறிஞர்களாலாராயத்தக்கன.

## அ. காலம்

நமது அரசன் கடைச் சங்க காலத்தவன் என்பது நிச்சயமாகிறது.

## முடிவுரை

இதுகாறும் கூறியவாற்றால் தமிழகத்தின் பழமையும், அந்நாட்டு மூவேந்தர்களின் சிறப்பும், அவருள் முக்கியமாக சேர பரம்பரையின் பெருமையும், அம்மரபு பழமையும் தெய்வத்தன்மையும் உடையதென்பதும், பதிற்றுப் பத்திற்குரிய சேரமன்னவர்களின் பெயரும் வீரச்செயலும் செங்குட்டுவனுடைய தாய்தந்தையரும், அவன் போர்ச் செயலும், சமயநிலையும், அவன் காலத்து அரசர்களும், புலவர்களும், அவனது குணதிசயங்களும், அரசியல் முறையும், தலைநகரமும், காலமும் ஒருவாறு சுருக்கி விளக்கப்பட்டன.

---

மதிப்புரை :—"கண்ணப்பர் வரலாறும் திருக்காளத்திக் காட்சியும்"—திருவரங்க நீலாம்பிகை அம்மையாரியற்றிய மிக அரிய நூல். விலை அணா 10. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற் கிடைக்கும். தூய தமிழ் நடையில் நாயனார் சரிதையின் நுட்பங்களெல்லாம் அறிவியல் முடிபுகளின் துணைகொண்டு விளக்கப்பட்டுள்ளன. கலைமலிந்த சீர்நம்பி, கண்ணப்பனொப்பதோ ரன்பின்மை முதலிய திருவாக்குக்களின் பொருள் இங்கே காணலாம். ஒவ்வொருவரும் வாங்க வேண்டிய நூல்.

# சைவ மங்கையர் மகாநாடு

[ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் தொகுத்தது]

இத்தலைப்பெயர் பூண்ட மகாநாடு பிப்ரவரிமீ 22உ சனிக்கிழமை பிற்பகல் 3-மணிக்குக் கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, 150-வது எண்ணுள்ள இல்லத்தில் கூடிற்று. ஏறக்குறைய 200 பெண்மணிகள் வந்திருந்தனர். இம் மகாசபைக்குச் சென்னை அரசாங்கத்துச் சுகாதாரமந்திரியார் கனம்பொருந்திய எஸ். முத்தையா முதலியார் அவர்களின் இல்லக் கிழத்தியாராகிய ஸ்ரீமதி எம். இராஜம்மாள் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

இப்பெரும் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன்னின்ற ஸ்ரீமதி பண்டிதை எஸ். கிருஷ்ணவேணி அம்மாள் சங்கத்தைக் கூட்டியதற்குரிய காரணத்தை எடுத் துரைத்தார்கள். அதன் சுருக்கம் வருமாறு :—

"1928ஆம் டிசம்பர்மீ பச்சையப்பன் கலாசாலையில் கூடிய சைவ சித்தாந்த மகாசமாஜத்தில் நான் பேச நேர்ந்தபோது, பெரிய பெண்கள் கல்வி கற்கவேண்டுமென விரும்பினாலும், கடவுள்பக்தியினால் மனச்சாந்தியுடன் தன்காலத்தைக் கழிக்கவேண்டுமென எண்ணினாலும், கைத்தொழில் முதலிய பல விஷயங்களில் சிறப்படையக் கருதினாலும் மேற்கூறியவைகளில் தாங்கள் முன்னேற்ற மடைவதற்கு ஒரு வித வசதியும் இல்லாமலிருப்பதும் இதைப்பற்றி இத்துணைச் சங்கங்கள் கவலை எடுத்துக் கொள்ளாமலிருப்பதும் மிகவும்விசனிக்கத்தக்கதேயாகுமென்றும் இவ்வித உதவிகள் இன்மையால் பெண்கள் படுங் கஷ்டங்கள் பலவாகுமெனவும் ஆதலால் பெண்மக்கள் மாட்டுக் கருணையுள்ள சிலர் இதற்கு ஏதேனும் ஒரு வழிதேடுதல் நலமென்றும் கூறினேன். அதற்குச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் காரியதரிசியார் இதைப்பற்றி நீங்கள் "சித்தாந்தம்" பத்திரிகையில் சில கட்டுரைகளை எழுதினால் அதற்குத் தகுந்த முயற்சி செய்யலாமென்று தெரிவித் திருந்தார். அவர் இவ்வருடமும் பெண்கள் சபை ஒன்றுகூட்டி அதில் செய்ய வேண்டிய தீர்மானங்களைச் செய்தால் நாங்கள் எங்களால் இயன்ற உதவி செய்கின்றோ மெனக் கூறியது மாத்திரமேயன்றி விளம்பரங்களையும் அச்சிட்டு இடம் முதலிய வசதிகளையும் செய்து கொடுத்தார். இனி நம் பெண்மணிகள் ஒருங்கு சேர்ந்து, கல்வி, கைத்தொழில், கடவுள்பக்தி முதலிய விஷயங்களை நம் பெண்மணிகளுக்கு ஊட்டி தேசத்தை முன்னேற்றமடையச்செய்வதற்கு வேண்டிய முயற்சிகளில் தலையிடுதலே நம்கடமையாகும்".

அடியிற்கண்ட பெண்மணிகள், தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்து அவைகளை நடத்த வேண்டிய முறைகளையுங் கூறினார்கள்.

## சமயக் கல்வி

### ஸ்ரீமதி K. கிருஷ்ணவேணியம்மாள்

சமயக் கல்வி என்றால் சமயத்தைப் பற்றிச் சொல்லுகின்ற கல்வி என்றும், எல்லா மதங்களுக்கும் தான் இடங் கொடுத்து நிற்பதினால் சைவ சமயம் சிறந்தது என்றும், சிறு குழந்தைகளுக்குத் திருநீறு அணிவதனால் உண்டாகும் நன்மைகளைப் பற்றிக் கூற

அ

வேண்டுமென்றும் நல்ல மார்க்கத்தில் நடக்க வேண்டுமானால் சமயமென்று ஒன்று வேண்டு மென்றும் பேசினார்கள்.

சபைக்கு வந்திருந்தவர்களில் ஒருவரால் கீழ்வரும் வினாக்கள் எழுப்பப் பட்டன :—

1. சைவமங்கையர் மகாநாடு என்று ஏன் இருக்கவேண்டும் ?

2. சமயக் கல்வி என்றால் எந்த சமயத்தைப் பற்றிப் போதிப்பது ?

3. எல்லாரையும் சைவராக்க முடியுமா ?

4. பொதுப்பட ஏன் இருக்கக் கூடாது ?

5. மற்ற நாடுகள் ஒற்றுமையுடன் இருப்பதற்குக் காரணம் அவர்கள் பொது மதமே யன்றோ ?

ஸ்ரீமதி விநாயக லக்ஷ்மியம்மாள் நான்காவது கேள்வியை ஆமோதித்தார்கள்.

ஸ்ரீமதி பண்டிதை எஸ். கிருஷ்ண வேணியம்மாள், மேற்கண்ட கேள்விகளுக்கு அளித்த விடையின் சுருக்கம் வருமாறு :—

சைவசித்தாந்த சபையார் தாங்கள் பெண்கள் முன்னேற்றத்திற்கு உதவி செய்கிறோமென்று முன் வந்து, இச் சங்கம் அவர்கள் சங்கத்தின் சார்பாக நடைபெறுவதற்கு வேண்டிய உதவி செய்தமை யாலும், மேற் கூறிய கல்வி, கைத்தொழில் முதலியவைகளினால் பெண்களை முன்னேற்றமடையச் செய்வதற்கு அவர்கள் சபையின் இடத்தையே வாரந்தோறும் உதவுவதாகக் கருணையுடன் ஒப்புக் கொண்டிருப்பதனாலும், இப்பெண்கள் கூட்டத்தில் சந்தாதாரராகச் சேர்ந்து மாதம் 4 அணா கொடுக்கின்ற பெண்களுக்கு "சித்தாந்தம்" பத்திரிகையை இலவசமாகக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டதனாலும், சித்தாந்த சபையினர் சார்பாகவே இக்கூட்டம் கூடினது என்பதைத் தெரிவித்தற்பொருட்டு இங்ஙனம் பெயர் அமைக்கப்பட்டது. இது சைவசித்தாந்த சபையைச் சார்ந்த மங்கையர்சங்கமென்று இருக்கலாம். எல்லாரையும் சைவராக்க வேண்டுமென்ற நோக்கம் இச்சபைக்கே கிடையாது. சைவ வைணவ மதத்தினரும் இச்சங்கத்தில் சேர்ந்து முன்னேற்ற மடையலாம். அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்களுக்கு அந்தந்தமதக் கோட்பாடுகளைப் போதிப்பதுதான் தகுதி யுடையது. தற்கால நிலைமையில் பெண்களைக் கல்வியறிவில் முன்னேற்றமடையச் செய்கின்ற வழியைத் தேடுவது தான் தம் முக்கிய கடமை என்று நினைக்கின்ற பெண்களில் நானும் ஒருத்தி. இதற்குத் தக்க வசதிகள் எங்கெங்கு கிடைக்கின்றனவோ அங்கங்கெல்லாம் சென்று பெண்களுடைய அறியாமையையும் அல்லலையும் நீக்கவேண்டுமென்பதே என்னுடைய கொள்கையும் அவாவுமாகும்.

## தமிழ்க்கல்வி

### ஸ்ரீமதி நாராயணி அம்மாள்

கல்வி என்ற பதம் கல் என்ற பகுதியினடியாகப் பிறந்து வி விகுதி பெற்று வந்ததென்றும், பொது இடத்திற்குப் போகத் தான் தனக்கு விருப்பமென்றும், ஒரு மதத்தைப் புகழ்ந்து மற்ற மதங்களை இழிவுபடுத்தும் இடங்களுக்குப் போகப் பிரியப் படுவதில்லை யென்றும், எல்லா மதங்

களிலும் சிற்சில குறைகள் உண்டென்றும், "அங்கிங்கெனாதபடி" என்று ஸ்ரீ தாயுமான சுவாமிகள் சொன்னபடி இறைவன் எங்கும் நிறைந்துள்ளாரென்றும்,

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

என்றபடி கற்க வேண்டியவைகளைக் கற்று அதற்குத் தக்கபடி ஒழுகவேண்டியதே முறையென்றும், தன்னுடைய பள்ளிக்கூடத்தில் பாடம் எடுக்கும்போது 'கிறிஸ்தவக் குழந்தைகள், கன்னத்திலிருந்து எப்படி ஒருவன் பிறக்க முடியு'மென்று கேட்டதாயும், அதற்குத்தான் 'கன்னிக்கு எப்படி குழந்தை பிறந்தது' என்று பதில் சொல்லி எல்லா மதங்களிலும் சிற்சில குற்றங்கள் உண்டாதலால் அதைப்பற்றிப் பேச இது சமயமல்லவெனச் சொன்னதாகவும் கூறினார்கள்.

## கைத்தொழில்

### பத்மலோசனியம்மாள்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணம் அந்நாட்டினர் கல்வியும், ஒற்றுமையும், கைத்தொழிலுமே யென்றும், கல்வி எப்படி கற்க வேண்டியது அவசியமோ, அதைப்போன்றே கைத்தொழிலும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமென்றும், கைத்தொழில் கற்றுக்கொண்டால் வீடுகளை அலங்கரிப்பதற்கும் ஓய்ந்த நேரங்களைச் சரிவரக் கழிப்பதற்கும், தன் துணிகளைத் தைத்துக் கொள்வதால் பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்வதற்கும் சாதகமாக இருக்குமென்றும், ஆகையால் நம் பெண்மக்கள் ஒவ்வொருவரும் கல்வி கற்பதோடு கைத்தொழிலும் கற்றுக்கொள்ளுதல் நலமென்றும் கூறினார்கள்.

## வீடுவீடாகச்சென்று கல்வி கற்பித்தல்

### ஸ்ரீமதி சண்பகம்மாள்

நம் நாட்டில் அநேகமாகப் பெண்கள் வயதிற்கு வந்த பிறகு பள்ளிக்கூடங்களுக்குப் போக முடியாமல் தடுக்கப் படுகிறார்களென்றும் அப்படி வீட்டில் இருக்கும் பெண்களே இனித் தாய்மார்களாக வரப் போகின்றவர்களாதலால், அங்ஙனம் வரும்போது அவர்களுடைய குழந்தைகளைச் சரிவர வளர்த்தற் பொருட்டும், குழந்தைகளுக்குத் தாயினிடத்தில் மரியாதை உண்டாகும் பொருட்டும் தாய்மார்கள் கல்வி அறிவுடையவர்களாக விருப்பது நலமென்றும் நம் நாட்டில் தாய்மார்கள் குடும்பத்தை நடத்துவதில் மிகுந்த சமர்த்தர்களாயுள்ளதைப் போன்றே கல்வி அறிவிலும் இருந்து விடுவார்களாயின் மிகவும் சிறப்பாக விருக்குமென்றும் ஆகையால் இச்சபையோர்கள் தக்க பெண்களைத் திரட்டி வீடுவீடாகச் சென்று கல்வி கற்பிக்கும்படி ஏற்பாடு செய்தல் நலமென்றும் கூறினார்கள்.

### ஸ்ரீமதி அருள்சக்தி அம்மாள்

நம் நாட்டில் அநேகந் தாய்மார்கள் கல்வி அறிவில்லாமலிருக்கிறார்களென்றும் அப்படி இருப்பவர்களை வாரத்திற்கு ஒருமுறை ஒரு பொது விடத்தில் கூட்டிக் கல்வி கற்பிக்க வேண்டுமென்றும் படிக்க முடியாதவர்களுக்கு நல்ல விஷயங்களைப்பற்றிக் கூறி அவர்கள் அறிவை விருத்தியாக்க வேண்டுமென்றும் கூறினார்கள்.

### ஸ்ரீமதி துரையம்மாள்

எந்த கலியாணத்தைச்செய்ய முற்பட்டாலும் பணம் அவசியம் வேண்டுமென்றும் ஆகையினால் இச்சங்கத்தில்

அநேகர் சந்தாதாரராகச் சேர்ந்து பொருள் உதவி செய்யவேண்டுமென்றும் கூறினார்கள்.

### ஸ்ரீமதி இராஜம்மாள்

பெண்களின் முற்கால தற்கால நிலை என்பதை எடுத்துக் கொண்டு முற்காலத்தில் நம்முடைய பெண்மணிகள் கல்வி கேள்விகளில் வல்லவர்களாக இருந்தபடியால் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் சுதந்தரத்தைப் பெற்றிருந்தார்களென்றும் தற்காலத்தில் பெண்களுக்குக் கொடுக்க வேண்டிய கல்வியைக் கொடாமையால் தங்களால் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை என்றும் இத்தகைய சபைகள் முன்னுக்கு வந்து பெண்களுக்குக் கல்விகற்பித்தால் மிகவும் நன்மையாயிருக்குமென்றும், அங்ஙனமாயின் தன்னைப்போன்ற சிலர் தினந் தோறுங்கூட வந்து கல்வி கற்றுக் கொள்ளக்கூடுமென்றுங் கூறினார்கள்.

### ஸ்ரீமதி செல்லம்மாள்

எல்லோருக்கும் சமயமே சிறந்ததென்றும் இதுவே கடவுளை அடைவதற்கு ஒரு முக்கிய வழி யென்றும் தேசத்தை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு இத்துணைச் சங்கங்கள் அவசியமென்றுங் கூறினார்கள்.

சமாஜத்தில் மங்கையர் பகுதி ஒன்று நிறுவப்பட்டது. கூட்டத்துக்குத் தலைமைவகித்த ஸ்ரீமதி இராஜம்மாளவர்கள் சங்கத்தில் ஆயுள் அங்கத்தவராகச் சேர்ந்தார்கள். (ஆயுள் சந்தா ரூ 25.)

இறுதியில் கீழே குறிக்கப்பட்டவர்கள் மங்கையர் பகுதிக்கு நிர்வாக சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தலைவி—ஸ்ரீமதி பண்டிதை எஸ். கிருஷ்ணவேணி யம்மாள்.

காரியதரிசிகள்— ஸ்ரீமதி நீலாயதாக்ஷியம்மாள், ஸ்ரீமதி வேதவல்லியம்மாள்.

பாடம் கற்பிப்பவர்—ஸ்ரீமதி நாராயணியம்மாள். (தமிழ்)

கதை சொல்லுபவர்கள்— ஸ்ரீமதிகள் இராஜம்மாள், புஷ்பாவதி யம்மாள், சிவஞானம்மாள்.

கைத்தொழில்—ஸ்ரீமதி ஆர். சரஸ்வதியம்மாள்.

தேவாரம்—ஸ்ரீமதி தேவார இராஜம்மாள்.

தெலுங்கு—ஸ்ரீமதி ஆண்டாளம்மாள்.

வடமொழி—ஸ்ரீமதி இலக்குமியம்மாள்.

வீடுதோறும் சென்று பாடம் சொல்பவர்—ஸ்ரீமதி ப. தனம்மாள்.

அனைவருக்கும் வந்தனங் கூறியும், சந்தனம், புஷ்பம், தாம்பூலம், கற்கண்டு முதலியன வழங்கியும் முடிந்த பிறகு சபை இனிது கலைந்தது.

---

**குறிப்பு :**—வெளியூர்களிலுள்ள சைவ மங்கையரும் பல வழிகளிலும் உதவிபுரிந்து நமது சமாஜத்து மங்கையர் பகுதியைப் பலப்படுத்துமாறு வேண்டுகிறோம். இதற்காக சமாஜ விதிகளில் திருத்தம் செய்துகொள்ள சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று 15 3-30 மாலை 5-30 மணிக்கும், **quorum** (நிறையெண்) வாராதுவறினால் 17-3-30 மாலை 5-30 மணிக்கும் நடைபெறும்.—**ம. பாலசுப்ரஹ்மண்யம்**, சமாஜக் காரியதரிசி.

# சென்றடையாத திருவுடையான்

[G. கல்யாணம் B. A.]

"சித்தாந்தம்" பத்திரிகை மூன்றும் ஆண்டு முதல் இரண்டு இதழில் "சென்றடையாத திருவுடையான்" என்னும் அருள்வாக்கின் அர்த்தத்தை அறிய ஒரு நண்பர் முன் வந்தது பாராட்டத் தக்கதே. ஆனால் அவர் கூறிய உரையாகிய "இந்திரன் முதலியோரை அடைந்து பெற முடியாத திருவுடையான்" என்பது உண்மையாகவே பொருத்தமான உரை என்று அவர் கருதினதாகத் தோற்றவில்லை. வேறே பல உரைகள் கிளத்தக்கூடும் என்பதை அவர் வியாசத்தின் அடியில் எழுதிய குறிப்பினாலேயே குறிப்பிக்கிறார் என்று நினைக்கிறேன்.

'சென்று அடையா' என்னும் சொற்றொடர் 'வானவரிடம் சென்று அடைய முடியா' என்னும் பொருளைத் தரின், வானவருக்கு ஓர் ஏற்றம் நமது சமயாசாரியர் கற்பித்ததாகக் கருத வேண்டியிருக்கும். "திருச்சிற்றம்பல மேய செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்று முழக்கிய ஒரு பெரியார் "தீய அசுரர் பகையுண்டு செற்றமுண்டு....நோயுமுண்டு நோய்கட்கெல்லாம் தாயான காயமுண்டு....மாயும் தன்மையுண்டானல் வானோர்க்கென்னை வளன் உண்டே" என்னும் பெருந்திரட்டுப்பாவுக்கு மாறாகவும், "அவமாய தேவர் அவகதியில் அழுந்தாதே," "வானேயும் பெறில் வேண்டேன்," "வேண்டேன் மண்ணும்விண்ணும்," "வானோர்க் கரிய மருந்தே போற்றி" என்னும் மணிவாக்குகளின் கருத்துக்கு மாறாகவும் வானோரை உயர்த்தி யிருப்பதாகப் பொருள் கொள்வது ஏற்புடைத் தாகுமா?

இனிச் "சென்று" என்பதற்கு, "தற்போதத்துடன்சென்று" என்று பொருள்கொண்டு "திரு" என்பதை "மோக்ஷமாகிய சாம்பிராச்சியம்" என்னும் பொருளில் எடுத்தால், 'சென்றடையாத திரு உடையவன்" என்பதற்குத் "தற்போதத்துடன் செல்பவர் அடைய முடியாத மோக்ஷ செல்வத்தை உடையவன்" என்று பொருள் கொள்ளுவது சுருதி யுத்திக்குப் பொருந்துமா என்று ஆராயுமாறு வேண்டுகிறேன். "திருமாலும் சென்று உணராத் திருவடியை" என்னும் திருவாக்குடன் இச்சொற்றொடரை ஒப்பு நோக்கின், "அடைவோம்" என்னும் கருத்துடன் செல்பவருக்கு எட்டாத திருவடி யுடையவன் எம்பிரான் என்பது தெள்ளிதின் போதரும். ஆகையால்தான் "சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும்" பெற்றியை மணிவாசகப் பெருமானே இன்னொரு பாவில் உணர்த்தியுள்ளார். "நான்" என்னும் நிலை கெடும்படியாகத் தேய்வு பலமுறை உற்றபின்புதான் இறைவனுடன் ஐக்கியம் கூடும் என்பதை நம் ஞான நூல்கள் நன்றாக விளக்கி யிருப்பதால், அதற்கு மாறான கருத்தை அந்நூல்களில் காண்பது சரியன்று என்பது கருதற்பாலது. அடைபவனும் அவனே, அடைவிக்கும்படி செய்விக்கும் அவன் இன்னருளும் நம்வயத்த தல்ல என்பதை "நானே கருதின் வரநாடார் சும்மா

இருந்தால் அவர்தானே அணுவர்'' என்னும் தாயுமானவர் கூற்று செம்மையாய் விளக்குகிறது. ஆகவே மேற் கூறிய உரை அறிஞர் ஏற்றுக் கொள்ளத் தக்கதா என்று ஆலோசித்து, அப்படி அங்கீகரிக்கத் தக்கதாயின் நமது பத்திரிகையில் வெளியிடுமாறு விரும்புகிறேன்.

---

# அதர்வசி கோபநிஷத்

[பலாசூர் - இராமநாத சாஸ்திரியார்]

## 'பத்ரம் கர்ணேபி:' என்பது சாந்தி

### முதலாவது கண்டம்

ஓம்: ஸ்ரீ பிப்பலாதரின் குமாரரான அங்கிரஸ் என்பவரும் ஸநத்குமார மகரிஷியும் பிரசித்தரான அதர்வரைக் கீழ்வருமாறு கேட்டார்கள் : "பகவானே! ஆதியில் ஏற்பட்ட தியானம் எது? தியானம் செய்யத் தகுந்தது எது? தியானம் செய்கிறவன் யார்? தியானம் செய்யப்படுவது எது?

அந்த அதர்வர் இவர்களுக்கு இவ்வாறு பதில் கூறினர் : 'ஓம்' என்ற இந்த அக்ஷரமே ஆதியில் ஏற்பட்ட தியானம். இதுவே தியானம் செய்யத்தகுந்தது. இதுவே பரப்பிரும்மம். இதற்கு நான்கு வேதங்களும் நான்கு கால்கள். ஆதலால் இது நான்கு கால்களை யுடையது. இதுவே அழிவற்ற பரப்பிரும்மம். இது நான்கு மாத்திரைகளை யுடையது. இதன் முதலாவது மாத்திரையானது - பூமி, அகாரம், ருக்குகளுடன் கூடிய ருக்வேதம், பிரும்மா, அஷ்டவஸுக்கள், காயத்ரீ சந்தஸ் கார்ஹபத்யம், இவையடங்கியது.

இரண்டாவது மாத்திரையானது— ஆகாசம், உகாரம், யஜுஸ்களுடன் கூடிய யஜுர்வேதம், விஷ்ணு, ஏகாதச ருத்திரர்கள், திருஷ்டுப் — சந்தஸ் தக்ஷிணாக்னி இவையடங்கியது.

மூன்றாவது மாத்திரை யானது— ஸ்வர்க்கம், மகாரம், ஸாமஸ்களுடன் கூடிய ஸாமவேதம், ருத்திரதேவர், துவாதச ஆதித்தியர்கள் ஜகதீசந்தஸ், ஆகவனீயாக்னி இவையடங்கியது.

இந்த ஓம்காரத்தின்கடைசியிலுள்ள நான்காவதான அரைமாத்திரையானது ஸோமலோகம், ஓங்காரம், ஆதர்வமந்திரங்களோடு கூடிய அதர்வவேதம், பிரளய காலாக்னி, ஏழு மருத்துகள், விராட்புருஷன் ஒருவரே ரிஷி, எங்கும் நிறைந்த பிரகாச முள்ளது. அதாவது இந்த ஓங்காரத்தில் சகல வேதங்களும் தேவதைகளும் லோகங்களும் சந்தஸ்களும் யாகத்தில் உபயோகப் படுகின்ற அக்னிகளும் அடங்கி யிருக்கின்றன என்பது கருத்து. தவிர ருக்வேதத்திலுள்ள ஒவ்வொரு வாக்யத்திற்கும் ருக் என்றும், யஜுர் வேதத்திலுள்ள ஒவ்வொரு வாக்யத்திற்கும் யஜுஸ் என்றும், ஸாமவேதத்திலுள்ள ஒவ்வொரு வாக்யத்திற்கும் ஸாமம் என்றும் பெயராகையால் ருக், யஜுஸ், ஸாமங்களோடுகூடிய வேதங்களென்று இங்கு உபயோகிக்கப்பட் டிருக்கிறது.

முதலாவது மாத்திரையானது சிவப்பும் மஞ்சளும்கலந்த வர்ணமுடையது. மகாரன பிரும்மாவை தேவதையாய் உடையது. இரண்டாவது மாத்திரையானது,மின்னல்போல்காந்தியுள்ளது; கருப்பானது. விஷ்ணு இதற்கு தேவதை. மூன்றாவதுமாத்ரையானது சுபாசுபம் நிறைந்தது. வெண்ணிறமுள்ளது. இதற்கு தேவதை ருத்திரர். கடைசியிலுள்ள நான்காவதான அரையானது, மின்னல் போன்றது ; ஸகல வர்ணங்களுமுள்ளது. இதற்கு தேவதை ஸகல லோகங்களேயும் பூரணம் பண்ணிக்கொண் டிருக்கிற துரியாத்மாவான புருஷன். ஆதலால் இந்த ஓம்காரமானது நான்கு அக்ஷரங்களே யுடையது. நான்கு பாதங்களே யுடையது. நான்கு சிரஸையும் நான்கு மாத்திரைகளேயும் (ஸ்தூலம், ஹ்ரஸ்வம், தீர்காம், புலுதங்களேயும்) உடையது. 'ஓம், ஓம், ஓம்' என்று மூன்று முறை உத்தமமாய் உச்சரித்தால் துரீயத்தில் இருக்கும் சாந்தமான ஆத்மாவானது புலுதமான பிரணவத்தின் ஸஹாயத்தால் ஸகலமும் ஓம் என்று ஆகும். ஆத்மஜோதி யானது எப்போதும் பிரகாசிக்கின்றது.

ஒரு முறை உச்சரித்த மாத்திரத்தால் உயரக் கொண்டு போகின்றதென்பதால் ' ஓம் காரம் ' என்னப்படும். பிராணங்கள் எல்லாவற்றையும் லயம் ஆக்குவதால் ' பிரலயம் ' என்னப்படும். பிராணங்கள் எல்லாவற்றையும் பரமாத்மாவிடம் ஐக்கியம் அடையும்படி செய்வதால் 'பிரணவம்' என்னப்படும். இது நான்கு விதமாய் இருந்துகொண்டு ஸகல தேவர்களுக்கும் வேதங்களுக்கும் காரணமாய் இருந்து கொண்டு எல்லா வஸ்துவிற்கும் ஆதார பூதமாய் விளங்குவதால் பிரணவ ரூபமாய் இருக்கின்றது.

முதலாவது கண்டம் முற்றிற்று

## இரண்டாவது கண்டம்

தேவர்கள் இவ்வாறு தியானம் செய்தார்கள். இந்த ஓம்காரமானது ஸகலமான துக்கம் பயம் இவைகளிலிருந்து கரையேற்றுவதால் ' தாரம் ' என்னப்படும்.

இதில் ஸகல தேவர்களும் அடங்கியிருப்பதால் இது ' விஷ்ணு ' என்னப்படும்.

இது எல்லாவற்றையும் விஸ்தாரப் படுத்துவதால் ' பிரும்மம் ' என்னப்படும்.

இது ஸமஸ்தமான அந்தரங்கங்களிலும் இருந்து மேலான தீபம்போல் பிரகாசிப்பதால் ' பிரகாசம் ' என்னப்படும்.

இந்த ஓம்காரம் ஸகலமான பிரகாசங்களேக் காட்டிலும் எப்போதும் சரீரத்தின் உள்ளேயிருந்துகொண்டு மின்னல்போல் அடிக்கடி பிரகாசிக்கின்றது. பிறகு மாயாரூபமான ஆவரணத்தைப் பேதித்துக்கொண்டு ஸகல லோகங்களேயும் வியாபிக்கின்றது. உலகங்களே வியாபிக்கும்படி செய்கின்றது. இவ்வாறு வியாபிப்பதால்இந்த ஓங்காரமே மஹாதேவன் ஸர்வவியாபீ.

இரண்டாவது கண்டம் முற்றிற்று

## மூன்றாவது கண்டம்

இந்த ஓம்காரத்தின் முதலாவது மாத்திரையானது ஜாகரிதம் என்னும் அவஸ்தை. இரண்டாவது மாத்திரை ஸ்வப்னவஸ்தை. மூன்றாவது மாத்திரை ஸுஷுப்தி. நான்காவது அர்த்த

மாத்திரை துரீயம் என்னப்படும். இவ்வித மாத்திரைகளுடன் கூடின இந்த ஓம்காரம் ஸகல பாதங்களான வேதங்களையும் ஜயிப்பதால் ஸ்வயம் பிரகாசமுள்ளது. இதுவே பிரும்மம் ஆகின்றது. இதனால் சகல ஸித்துக்களும் உண்டாகும். ஆதலால் இது தியானத்தின் ஆதியில் எப்போதும் உபயோகப்படுத்தப் படுகின்றது. எல்லா இந்திரிய வியாபாரங்களையும் அடக்குவதால் தியானத்தைநிலைநிறுத்திப் பரம்பொருளைப் பிரகாசப் படுத்துவதால் இதுவே பிருமமாகின்றது.

ஸகல இந்திரியங்களையும் அடக்கிக் கொண்டு தியானம் செய்வதே விஷ்ணு. பிராணங்களை இந்திரியங்களோடு மனதில் அடக்கிக் கொண்டு தியானம் பண்ணுகிறவன் ருத்திரன். பிராணங்களை இந்திரியங்களோடு மனதில் அந்த நாதத்தின் அந்தத்தி லிருக்கிற பரமாத்மாவிடம் அடக்கிக் கொண்டு 'ஈசானர்' என்னும் பொருளைத் தியானம் செய்ய வேண்டும்.

இவ் வுலகில் எல்லா வற்றையும் சிருஷ்டித்துக் காத்து ஸம்ஹரிக்கின்ற பிரும்மா விஷ்ணு ருத்ரர்கள் ஜனிக்கின்றார்கள். இந்திரியங்களெல்லாம் பூதங்களுடன் உத்பவிக்கின்றன. காரணங்களுக்கு மேற்பட்ட காரணமான, ஸர்வ ஐச்வரியங்களுடன் கூடின ஸர்வேச்வரனை சம்புவே ஹிருதயாகாசமத்தியில் எப்போதும் தியானம் செய்யத்தகுந்தவர். இவ்விதம் இந்த பரமேச்வரனை ஒரு க்ஷணமாவது தியானம் செய்தால் 280 யாகங்கள் செய்வதாலுண்டாகும் பலனைவிட அதிக பலனை அடைகின்றான். பூர்ணமான ஓங்காரத்தைத் தியானம் செய்வதாலும் ஸகலதியானம் யோகம் ஞானம் இவைகளின் பலனே உண்டாகின்றது.

ஆதலால் ஓம்காரத்தின் தாத்பரியமானது மங்களகரமான ஈசன் ஒருவரே தியானம் செய்யத் தகுந்தவர். அவரே சகல மங்களங்களையும் உண்டு பண்ணுகிறவர். ஆதலால் மற்ற எல்லாவற்றையும் விலக்கிவிட்டு பரமேச்வரன் ஒருவரையே தியானம்செய்ய வேண்டும். ஆதலால் நமக்கு ஸகல மங்களங்களும் உண்டாகும்.

அதர்வசிகா உபநிஷத் முடிவு பெற்றது. இதை அத்தியயனம் செய்தால் மனிதனுக்குக் கர்ப்பவாசம்நீங்கும். சீக்கிரம் கர்ப்பவாஸம் நீங்கும். ஓம் சத்தியம். இந்த உபநிஷத் முற்றிற்று.

**மூன்றாவது கண்டம் முற்றிற்று.**

அதர்வசிகோபநிஷத் முற்றிற்று.

---

**குறிப்பு** :—இந்த உபநிஷத்தின் மொழிபெயர்ப்பில் விளங்காத பகுதிகளை **நண்பர்கள்** தெரிவித்தால், இவ்வாசிரியரைக் கொண்டு விளக்கவுரைகள் எழுதச் செய்வோம். இதுவே இவ்வாசிரியரும் கோருவது.—**பத்திராசிரியர்.**

# சைவசித்தாந்த மகாசமாஜ அறிக்கைகள்

நமது சமாஜத்தின் 14-வது ஆண்டுவிழாவில் தலைமைபூண்டு அவ்விழா முழுமையையும் தமது சொந்த செலவில் நடத்தி உபகரித்த திருப்பனந்தாள் ஆதீனக் கருத்தர் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் சிவசாயுச்சிய பதவி யடைந்தனர். நமது சமாஜத்தின் அநுதாபத்தை இதன் மூலம் தெரிவிக்கிறோம்.

"சித்தாந்தம்" பத்திரிகை, சைவசித்தாந்த மகாசமாஜம், தேவார வெளியீடு முதலியனபற்றிய எல்லாக் கடிதங்களும், மணியார்டர்களும் காரியதரிசி, **சைவசித்தாந்த மகாசமாஜம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை** என்ற விலாசத்துக்கே அனுப்பப்படல்வேண்டும். "சித்தாந்தம்" ஒவ்வொரு மாதயிதழும் அம்மாதம் 10-ம்தேதியன்று சென்னையில் ஜெனரல்போஸ்டாபீசுமூலம் அனுப்பப்படும். உரிய மாதயிதழை உரிய காலத்தில் பெறாதவர்கள் அம்மாதக் கடைசித் தேதிக்குள் காரியதரிசிக்குத் தெரிவிக்க வேண்டும். அவர்கட்கு **அடுத்த மாத யிதழோடு** தவறிய பத்திரிகை அனுப்பப்படும். அவ்வாறு உரிய காலத்தில் எழுதிப் பெற்றுக்கொள்ளாதவர்கட்கு இதழ் ஒன்று மூன்றணா வீதம் விலை போட்டு விற்கப்படும். "சித்தாந்தம்" பத்திரிகைக்குக் கட்டுரைகள் வழங்குவோர் தங்கள் தபால் விலாசத்தைத் தெளிவாக எழுதி, சைவ சமய உண்மைகள், அமைப்புகள், குறியீடுகள், ஒழுக்கமுறைகள் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைத் திறம்பட விளக்கி, எக்காரணங்கொண்டும் விவாதத்துக்கு இடந்தரக்கூடிய பொருள்களை நாடாது அறவே ஒழித்து, சாதாரண அறிவுடைய மக்களும் உணரக்கூடிய **எளிய தமிழ்நடையில் மூன்று பக்கங்கட்கு மேற்படாமல் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மசியில் எழுதி** அனுப்புதல் வேண்டும்.

---

# மதிப்புரைகள்

"**சிவார்ச்சனைத் திருமந்திரம்**":—விலை அணா கஉ. இதில் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூர் போற்றித் திருத்தாண்டகமும் பதினான்கு சாத்திரங்களை யொட்டிய அரிய குறிப்புரையும் அடங்கியுள்ளன. சிவபூசை செய்வோர் தவறாமல் வாங்குதற்குரிய அரிய நூல்.

"**ஆசார ஒழுக்கமுறை**":—விலை அணா ச. பக்கம் ௱. துரைத்தனத்தார் அங்கீகரித்தது. செய்வன, தவிர்வன, நித்தியகர்மானுஷ்டானம், சிவாலய தரிசனம், திருமுறைப் பாராயண விதி, விவாகம் என்ற ஆறு பகுதிகளை உடையது. "சைவ சமய நெறி" முதலிய அரிய ஒழுக்கமுறை நூல்களிற் பிழிந்த சாரமாக வுள்ளதென்று இந்நூலைக் கூறுதல் மிகையாகாது. ஒவ்வொருவரும் தமது ஒழுக்கத்துக்கு விழுப்பம் தேடுதற் பொருட்டு இந்நூலைப் பயிலுதல் வேண்டும்.

"**திருக்குறட் சாரம்**":—விலை அணா அ. (கலிகா பயிண்டு விலை அணா ம). இதில் திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால்களிலுள்ள 108 அதிகாரங்களிலும் சிறந்த 108 திருக்குறள்களைத் திரட்டி அவற்றிற்கு அருமையான உரையையும் அரிய பல மேற்கோள்களையும் ஆசிரியர் மிகத் திறம்பட நமக்கு உதவியிருப்பது போற்றத்தக்கது. திருக்குறள் முழுமையும் வாசிப்பதற்கு இத்தகைய திரட்டுக்களே வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

இம்மூன்று நூல்களும் திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி நாயுடு தெரு, 22 நெ. வீட்டிலிருக்கும் இவற்றின் ஆசிரியர் திருநெல்வேலி - பரமசிவன் பிள்ளை அவர்களிடம் கிடைக்கும். முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளுவதே தகுதியாகும்.

"**பிரமோதூத வருடத்திய சைவப் பஞ்சாங்கம்**":—இது வழக்கம்போல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பட்டு விட்டது. விலை அணா கஉ. ஸ்மார்த்த முறைகளை விடுத்துச் சைவ முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுவோர், வாய்ப்பறை யறையாமல் இப்பஞ்சாங்கத்தை வாங்கியும் நண்பர்கள் ஒவ்வொருவரையும் வாங்கச் செய்தும் கடனாற்றுதல் இன்றியமையாதது.

"**செந்தமிழ்ச் செல்வி**" **சிலம்பு அ, பரல் க**:—அறுபத்து நான்கு பக்கங் கொண்ட இவ்விதழ் நமது பார்வைக்கு வந்தது. வழக்கம்போல் நல்ல காகிதத்தில் மிக அரிய இலக்கியக் கட்டுரைகளும் சைவ சித்தாந்தப் பொருள்கள் பற்றிய உரைகளும் பிறவும் மிக அழகாக அச்சிடப் பட்டுள்ளன. ஆண்டுக் கையொப்பம் ரூபா நான்கு தான். பொதுவாக அனைவரும் சிறப்பாகச் சைவர் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை வாங்குவது சமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் செய்யும் தொண்டுகளில் ஒன்றாகும்.

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தில்

# விற்பனைக்குரிய புத்தகங்களின் அட்டவணை

| | ரூ. | அ. |
|---|---|---|
| "சித்தாந்தம்" மலர் ஒன்று (பைண்டு பிரதி) ... | 2 | 0 |
| "சித்தாந்தம்" மலர் இரண்டு (பைண்டு பிரதி) ... | 2 | 0 |
| சுந்தரர் தேவாரம் ... ... | 0 | 4 |
| திருவாசகம் ... ... | 0 | 2 |
| திருக்குறள் விளக்கம் - அறத்துப்பால். | 3 | 4 |
| ஷை பொருட்பால். | 4 | 8 |
| ஷை காமத்துப்பால். | 1 | 12 |
| ஷை தொகுப்புரை. | 0 | 8 |
| புலால்மறுத்தலுக்கு 50 காரணங்கள் ... | 0 | 2 |
| சர்வமத சம்மதம் ... ... | 0 | 2 |
| திருநாளைப்போவார் தீக்குளித்ததேன். | 0 | 2 |
| நள்ளிரவில் நகர்க்காட்சி ... | 0 | 2 |
| கடவுள் ... ... | 0 | 2 |
| பண்மயத்த மொழிப்பாவை ... | 0 | 2 |
| சமயத்தின் சாரம் ... ... | 0 | 2 |
| சமய வளர்ச்சி ... ... | 0 | 2 |
| சுயமரியாதை சம்பாஷணை ... | 0 | 2 |
| திருஞானசம்பந்தர் (நாடகம்) ... | 0 | 8 |
| சைவப் பெரியார் தனிக்கூட்டத் தீர்மானங்கள் ... ... | 0 | 2 |
| சங்க நூல்களும் சைவமும் ... | 0 | 2 |
| சைவர் மகாநாடு, திருப்பாதிரிப்புலியூர். | 0 | 8 |
| அறுசமயப் பகுதி ... ... | 0 | 2 |
| அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை ... ... | 0 | 4 |
| சிவஞானபோதம் ... ... | 0 | 2 |
| அஷ்டப்பிரகரணம் ... ... | 3 | 0 |
| சிவார்ச்சனா சந்திரிகை ... ... | 1 | 8 |
| சைவபூஷணம் ... ... | 1 | 0 |
| சைவ சித்தாந்த பரிபாஷை ... | 0 | 8 |
| The Grace of Lord Siva (ஆங்கிலத்தில்) ... ... | 0 | 4 |
| திருக்குறட் சாரம் ... ... | 0 | 8 |
| ஷை (கலிக்கோ) ... | 0 | 10 |
| ஆசார ஒழுக்கமுறை ... ... | 0 | 4 |
| சிவார்ச்சனைத் திருமந்திரம் ... | 0 | $1\frac{1}{2}$ |

சுந்தரர் தேவாரம் மொத்தமாக வாங்குவோர்க்கு ரூபாய் ஒன்றுக்கு ஐந்து பிரதிகள் வீதம் கொடுக்கப்படும். மேற்கண்ட விலைகள் புத்தகக் கிரயம் மட்டுந்தான். தபாற்கூலி வேறு. பார்சல் செலவு, தபாற்கூலி, வி. பி. செலவு முதலியன வாங்குவோரே செலுத்தவேண்டும்.

மேலேகண்ட அட்டவணையிலுள்ள புத்தகங்கள் தேவையாயின், சமாஜ ஆண்டுவிழா முதலிய கூட்டங்கள் நடக்குமிடங்களிலும் பெறலாம்; கீழ்வரும் விலாசத்துக்கு முன்பணம் அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம்.

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், காரியதரிசி.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

---

# அப்பர்சுவாமிகள் தேவாரம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 10,000 பிரதிகள் அச்சிட்டதைப் போலவே சமாஜத்தினர் அப்பர் சுவாமிகள் தேவாரம் 5,000 பிரதிகள் அச்சிடுகின்றனர். இதற்குச் சுமார் ரூ. 3,000 தேவை. சைவப்பற்றுடைய தருமசீலர்கள் சிலர் ரூ. 1500 முன்பணமாக உபகரித்துள்ளார்கள். இவ்வறிக்கையைக் கண்ணுறும் ஒவ்வொரு சைவரும் தம்மால் இயன்றால் நூறுரூபாய் அனுப்பியாவது இன்றேல் தருமசீலர் ஒருவரை அடுத்து நூறு ரூபாய் வாங்கி அனுப்பியாவது உபகரிக்க வேண்டுகிறோம். புத்தகம் நாளது சித்திரைமீ சதய நக்ஷத்திரமாகிய அப்பர் சுவாமிகள் திருநக்ஷத்திரத்தன்று வெளிவரும்.

# முருகன் திருவருட்பா

வடலூர் - இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்தது; திருவருட்பாவில் ஐந்தாந் திருமுறையாகத் திகழ்வது. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பேறு குறித்துத் திருத்தணிகையில் முருகப் பெருமான் முன்னிலையில் "அமுத அமுகை" இந்நூலில் தேங்கி வழிகிறது. "முருகன் திருவருட்பா" கருங்கல் மனதையுங் கரைத்துக் கரைத்து இளகச் செய்யும்; திருவருட்பேற்றில் காதல் எழுப்பும். அதை ஒருகால் ஓதுவோரும் அன்பராதல் ஒருதலை.

விலை அணு 8.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.



Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.